15வது வருடத்தில்
# விளம்பரம்
VLAMBARAM™
☎ 416-282-8059 | 416-282-4978

வாய், பல் சம்பந்தமான வைத்திய சேவைகளுக்கு
WALK IN DENTAL CLINIC
Dr. Iru Vijayanathan
குடும்ப பல்வைத்தியர்
OPEN 7 DAYS
416-264-3232
3150 Eglinton Ave. E.
Markham & Eglinton சந்திப்புக்கு அருகாமையில்

வீடு விற்க, வாங்க...
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)

HomeLife GTA Realty Inc.
1711 McCowan Rd. Suite #206, Toronto
Direct: 416.315.9397
OFFICE: 416.321.6969
Sales Agents Welcome

நதி 15 | பாலம் 09 | சமூக முன்னேற்றப் பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | MAY 01, 2005


இரசிகர் மன்றமா? அரசியல் கட்சி அமைப்பா?
08


புதிய பாப்பரசர் Benedict XVI
24


அன்னையர் தின வாழ்த்துக்கள்

## டாக்டர் பாலாஜியின் முகசீரமைப்பு சாதனை

விதி கெடுத்த ஓவியங்களை சரி செய்யும் நவீன ரவி வர்மா என்றும், பிரம்மன் தான் படைத்த உருவங்களைச் சில நேரங்களில் சீர்குலைக்கும் நிலையில் நவீன பிரம்மனாக, சிற்பியாகத் திகழ்ந்து, சீர்குலைந்த படைப்புக்களைச் சீராக்கும் திறமையுள்ள நிபுணர் என்றும் இலங்கை மக்களாலும், ஜெர்மனி, கனடா, சுவிட்சலாந்து, மாலைதீவு என்று உலகெங்கும் மக்களால் புகழப்படுபவர், புகழ் பெற்ற முகச் சீரமைப்பு அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் எஸ். எம். பாலாஜி அவர்கள்.

வில் போன்ற புருவம், மீன் விழிகள், தாமரைக் கன்னங்கள், ரோஜா இதழ்கள் நேர் நெத்தி என்று எந்தப் பெண்ணும் கவிஞர் வரிகளுக்கு ஏற்ப தானும் அழகாக இருக்க வேண்டும் என்று தோன்றும்! ஒவ்வொரு பெண்ணும், தானும் ஒரு ஐஸ்வர்யா ராய் அல்லது சுஷ்மிதா சென் போல் அழகாக இருக்க வேண்டும் என்று நினைப்பதில் தவறேதுமில்லை. அழகாக இருந்தால் அதிலும் ஏதேனும் குறை இருப்பதாய் தோன்றும்.

எவ்வளவுதான் அழகாக இருந்தாலும் மேலும் அழகாக வேண்டும் என்கிற இயற்கையுணர்வு பெண்களுக்குள் இயல்பாகவே இருக்கும். தையற்கலைஞனிடம் தன் உடை இப்படி இருக்க வேண்டும், அப்படி இருக்க வேண்டுமென கேட்டுத் தைத்துக் கொள்வது போல, எனது முகம் இப்படி இருக்க வேண்டும், இன்ன மாதிரியான அழகுடன், அமைப்புடன் இருக்க வேண்டும், என்று கேட்டுப் பெறுகிற நிலை ஏற்பட்டு விட்டது. அதை இந்தியாவில் புரட்சிகரமாக, வெற்றிகரமாக செயல்படுத்தி வருபவர் டாக்டர் எஸ். எம். பாலாஜி அவர்கள்.

உலக அளவில் அதிக எண்ணிக்கையில் முகச்சீரமைப்பு அறுவை சிகிச்சை செய்துள்ள இவர் கணினி மூலம் அறுவை சிகிச்சை செய்வதில் உலக சாதனை படைக்க வேண்டும் என்ற உத்வேகத்துடன் செயல்பட்டு வருபவர். இதற்காகவே ஜப்பான் நாட்டில் 'கெஜாரோ' நகரில் நடந்த அகில உலக முகச்சீரமைப்பு ரெலிநேவிகேசன் அறுவை சிகிச்சை (Telenavigation Surgery) மாநாட்டின் சிறப்புப் பயிற்சி முகாமில் பயிற்சி பெற்று தாயகம் திரும்பியிருப்பவர். கணினி மூலம் அறுவை சிகிச்சை செய்யும் அகில உலக மையத்தின் துணைத் தலைவராக நியமனம் பெற்றுள்ள இவர், மருத்துவத் துறையில் கணினியின்

தொடர்ச்சி 04ம் பக்கம்

# கருத்துச் சுதந்திரத்திற்கு கழுத்து நெரிப்பு!

தராக்கி என்று அழைக்கப்படும் தமிழ் ஊடகவியலாளர் தர்மரத்தினம் சிவராம் (வயது 47) கொழும்பில் மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டுள்ளார். இலங்கை நாடாளுமன்றத்திற்கு முன்னால் உள்ள தியவன்ன ஓயாவுக்கு அண்மையில் இருக்கின்ற ஜப்பான் நட்புறவு பாலத்திற்கு அருகில் இவர் துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் சடலமாகக் கண்டுபிடிக்கப்பட்டார்.

மட்டக்களப்பைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், கொழும்பில் மிக நீண்ட காலமாக சுயாதீன ஊடகவியலாளராக கடமையாற்றி வந்தார். கொழும்பு பத்திரிகைகளிலும், தமிழ் நெற் (Tamil Net) இணையத்தளத்திலும் தனது கருத்துகளை சுயாதீனமாக வெளிட்டு வந்த சிவராமுக்கு பலதடவை கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை, பம்பலப்பிட்டிய பொலீஸ் நிலையத்திற்கு அருகில் உணவுச்சாலையில் உணவு அருந்திக் கொண்டிருந்த போது, வாகனத்தில் வந்த சிலர் கடத்தி சென்றுள்ளனர். இது பற்றி சிவராமின் மனைவி பம்பலப்பிட்டிய பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார். சிவராம் படுகொலைக்கு யார் காரணம் என்று பலத்த சர்ச்சை எழுந்துள்ளது. ஆனால் ஒரு மனிதனை கொலை செய்யும் உரிமை எவருக்கும் கிடையாது.

## சர்வதேசமும் கண்டிக்கின்றது

ஊடகவியலாளர் சிவராமின் படுகொலையை 'அனைத்துப் ஊடகவியலாளர்களுக்கும் விடப்பட்ட அச்சுறுத்தலே, சிவராம் படுகொலை' என்று இலங்கை ஊடகவியலாளர் அமைப்பு தனது கடுமையான கண்டனத்தை தெரிவித்துள்ளது.

இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் அக்கியோ சூடா, பிரான்ஸ் நாட்டை தலைமையாகக் கொண்டு இயங்கும் Reporters Without Borders அமைப்பு, தமிழீழ விடுதலைப் புலிகள், இலங்கை அரசு, அமெரிக்கத் திட்டமிடல் மற்றும் சர்வதேச கற்கை நெறிகள் அமைப்பின் தென்னாசிய பிராந்திய இயக்குனர் ரெறிசிரா ஸாபா



ஆகியோர் ஊடகவியலாளர் சிவராமின் கொலைக்கு கண்டனம் தெரிவித்துள்ளனர்.

சிவராம் 1982ல் காந்திய இயக்கத்தில் இணைந்தவர். பின்னர் தமிழ் மக்களின் விடுதலைக்காக புளொட் PLOTE இயக்கத்தில் இணைந்து செயல் பட்டவர். 1989ல் இவ் இயக்கத்தில் இருந்து விலகிய சிவராம், பின்னர் பத்திரிகையாளராக செயல்படத் தொடங்கினார்.

The Island, Sunday Times ஆகிய பத்திரிகைகளில் தராக்கி என்ற புனை பெயரில் அரசியல் கட்டுரைகள் எழுத ஆரம்பித்ததின் பின்னர் இவர் தராக்கி என்றும் அழைக்கப்பட்டார். ஆங்கிலத்தில் மட்டுமல்லாது வீரகேசரி, தினக்கதிர் போன்ற தமிழ் பத்திரிகைகளிலும் இவருடைய கட்டுரைகள் இடம் பிடித்தன. சிவராமின் படுகொலையை இலங்கையின் முக்கிய அரசியல் விமர்சகரான டயான் ஜயதிலக்க மிக வன்மையாகக் கண்டித்து எழுதியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
ஆலயம் திறந்திருக்கும் நேரங்கள்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்
காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm, மாலை 5pm - 9pm
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்.
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 - 754 - 7338 / 416 -724 -7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarboro.

Singapore Communication
Since 1991
$40/350 min + Unlimited incoming local calling
$50/500 min + Unlimited incoming local calling
$75/750 min + Unlimited incoming local calling
**Option E & W calling , Free phone $20, $30 Packages also available
For More Info Please Visit to the Store
*** Offer Ends Without Notice***
More Info. Call: 416-740-5292
5010 Steeles Ave. W., Unit 17 ABC-(Kipling & Steeles)

துரித பணமாற்றுச் சேவை
வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கும் கடுகதியில் பணம் அனுப்புவதற்கு
மு. காசிப்பிள்ளை & சன்ஸ்
416.267.8221

"Making Dreams Reality"

HomeLife GTA Realty Inc.
Ravi R. Raveendran BSc.(Eng)
Sales Representative
416•817•8479
Bus: 416•321•6969
1711 McCowan Rd., Suite #206, Scarborough, ON. M1S 3Y3
INDEPENDENTLY OWNED AND OPERATED, BROKER


Insurance & Financial Services
Balan Kanapathi (Agent)
• Auto • Home • R.R.S.P • Life
• Disability • Mutual Fund • Group Insurance • Child Education
• Travel & Business
416.321.1515 •905.294.2429
4433 Sheppard Ave. E. Suite 200, (Brimley/Sheppard)

வீடு வாங்க, விற்க...
ரவி பரமு
வீட்டுப் பிரதிநிதி
DIRECT: 416.262.4176
OFFICE: 416.321.6969

HomeLife GTA Realty Inc.
1711 McCowan Rd. Suite #206, Toronto

# உங்கள் வியாபார வெற்றிக்கு இணையத்தளம் தேவையா?

உங்கள் தொழில் வெற்றிக்கு காரணங்கள் என்னென்ன என்று வெற்றி பெற்றவர்களிடம் கேட்ட போது கிடைத்த பதில்கள் என்ன தெரியுமா?

மார்க்கெட்டிங் - பொருளை விற்பனையில் கடைபிடித்த அணுகுமுறைகள் - வாடிக்கையாளரைக் கவரக்கூடிய நேர்மையான சந்தைப்படுத்தல் (Marketing) என்று பதில் அளித்துள்ளனர். விளங்கவில்லையே என்கிறீர்களா? சற்றே விவரிப்போம்.

1. வாய்வழியாக கிடைத்த விளம்பரம். திருப்தியடைந்த வாடிக்கையாளர், மற்றொருவருக்குச் சிபார்சு செய்யும் போது புதிய வாடிக்கையாளர் கிடைக்கிறார். வாடிக்கையாளரிடம் இன்னும் சிறப்பாக எப்படி செய்யலாம் என்று கேளுங்கள். வெட்கப் படாதீர்கள். கேட்டு கண்டறிந்ததைச் செயல்படுத்துங்கள்.

2. உறவுகளை வலுப்படுத்துங்கள். ஆங்கிலத்தில் அதைத்தான் நெட்வேர்க்கிங் (Networking) என்கிறார்கள். உறவுகளை வலுப்படுத்த முயலும் போது முக்கியமாக, "கேட்கும் தன்மை" இருக்க வேண்டும். மற்றவர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து அவர்களைப் பேச விடுங்கள். அது உங்கள் உறவுகளை வலுப்படுத்தும். வியாபாரத்தை அதிகரிக்கும். உறவுகளை அதிகரிக்கப் பயன்படுத்தும் வழிமுறைகளில் இன்றைக்கு அதிகமாகப் பயன்படுத்தப்படுவது இணைய தள முறைதான். குறைந்த காலத்தில் உங்கள் செய்தி பலரைச் சென்றடைய, அதிக செலவில்லாத சாதனம் இணையதளம் அமைத்தல் தான். அதைப் பற்றி வரும் வாரங்களில் விரிவாகப் பார்ப்போம்.

3. உங்களை, உங்கள் வியாபாரத்தை நினைவில் வைத்துக் கொள்ளும் வகையில், முடிந்தால் சற்றே வித்தியாசமாக, ஒரு வியாபார அட்டை அல்லது தன் அறிமுக அட்டை (Business Card) அமைத்துக் கொள்ளுங்கள். மரம், பிளாஸ்டிக், துணி கலந்த அட்டை, (உங்கள்) புகைப்படம் போன்றவற்றையும் வியாபார அட்டைக்குப் பலர் பயன்படுத்துகின்றனர். உங்கள் தொழில் வெற்றிக்கு இவற்றில் எதைப் பயன் படுத்தலாம்? அல்லது வேறு எவ்வாறு உங்கள் வியாபார அட்டையைச் சிறப்பாக வித்தியாசமாக அமைக்கலாம்.

**செய்யும் தொழிலில் வெற்றி பெற**

4. இணையதளத்தையே வியாபாரத்தைப் பெருக்க முக்கியக் கருவியாக பல நிறுவனங்கள் முயன்று வெற்றி பெற்றுள்ளன. ஓர் உதாரணம் அமெசான், காம் இந்தப் புத்தகக் கம்பெனியின் வளர்ச்சிக்கு இணைய தளம் தான் காரணம் என்பதைப் பலரும் அறிவர். சிறிய நிறுவனம், பெரிய நிறுவனம் என்ற பேதத்தை இணையதளங்கள் உடைத்து எறிந்து விட்டன. பெரிய நிறுவனத்துக்கு உள்ள அத்தனை வாய்ப்புக்களையும் சிறிய நிறுவனத்துக்கும் இணையதளம் பெற்றுத் தருகின்ற உங்கள் வியாபாரத்துக்கு என்று ஓர் இணைய தளம் உள்ளதா? இல்லையேல் அதைத் தொடர்வதைப் பற்றிச் சிந்தித்தது உண்டா? இணைய தளம் என்றால் ஏதோ மிக அதிகமாகப் பணம் செலவு செய்ய வேண்டும் என்று நினைக்காதீர்கள். குறைந்த செலவில் இன்றைக்கு இணைய தளங்களை விரைவில் ஆரம்பிக்க முடியும். வரும் வாரங்களில் மேல் அதிக விவரங்களைப் பார்ப்போம்.

5. வாடிக்கையாளருடன் ஒரு நிரந்தர உறவை ஏற்படுத்திக்கொள்ளுங்கள். அவர்கள் உங்களைத் திரும்பத் திரும்ப நாடி வரச் செய்ய வேண்டும். என்ன செய்யலாம்? ஒரு குறிப்பிட்ட இடைவெளியில் உங்கள் வாடிக்கையாளரைச் சென்றடையக் கூடிய செய்தித்தாள் அல்லது இருபக்கப் பத்திரிகை தொடங்கலாமா? செலவில்லாமல் அந்தப் பத்திரிகையையும் மின் அஞ்சல் வழியாக அனுப்பலாம். மற்றவர்களின் மின் அஞ்சல் முகவரியைச் சேகரியுங்கள். நீங்கள் படிக்கும் இந்த விளம்பரம் பத்திரிகையை இணையதளத்தின் வாயிலாகவும் படிக்கலாம். இது உங்களுக்குத் தெரியுமா? இணையதள முகவரி, www.vlambaram.com போய்ப்பாருங்கள். பழைய செய்தித்தாள் களையும் நீங்கள் அங்கே காண்பீர்கள். இந்த நவீன வசதிகளை உங்கள் வியாபாரத்துக்கு நீங்கள் எப்படிப் பயன்படுத்தப் போகிறீர்கள்? வாடிக்கையாளருடன் நிரந்தர உறவுக்கு - பலரும் கையாளும் ஒரு வழி - திரும்பத் திரும்ப வரும் வாடிக்கையாளர்களுக்குத் தள்ளுபடி கூப்பன் கொடுத்தல் ஆகும். இந்த வெற்றிகரமான உத்தியை நீங்கள் கையாண்டு பார்த்தது உண்டா?

6. உங்கள் சேவையைப் பாராட்டியவர்களைப் பட்டியல் இடுங்கள். மற்றவர்கள் பார்வையில் படும்படி அந்தப் பட்டியலை வையுங்கள். உங்கள் இணையதளத்திலும் இந்தப் பட்டியலை இடம் பெறச் செய்யுங்கள். உங்கள் வாடிக்கையாளர் எண்ணிக்கை கூடுவதை நீங்கள் உணர்வீர்கள்.

**பெரி. முத்துராமன்**

7. உங்களுக்கு யார் மற்ற வாடிக்கையாளர் களை அறிமுகப்படுத்துகிறார்களோ, அவர்களை அடையாளம் கண்டு கொள்ளுங்கள். அவர்களை ஊக்குவியுங்கள், கௌரவியுங்கள். கௌரவிக்கும் முறை அவர்களுக்கு ஒரு சிறு தள்ளுபடி கொடுத்தலாகக் கூட இருக்கலாம். விளம்பரம் செய்யும் போது எந்த முறையில் வாடிக்கையாளர் அதிகம் வருகிறார் என்று கண்டறிந்து, அந்த முறையை அதிகமாகக் கையாளுங்கள்.



எல்லாவற்றிற்கும் மேலாக நேர்மை கலந்த பொறுமையும், விடாமுயற்சியும் வெற்றிக்குத் தேவை. இணைய தளங்கள் வியாபார வெற்றிக்கு எவ்வாறு வழிவகுத்துள்ளன என்பதை அடுத்த இதழில் குறிப்பாகப் பார்ப்போம்.

(வளரும்)


**அதிக செலவில்லாமல் சிறப்பான இணைய தளத்தை உங்கள் வியாபாரத்துக்கு என அமைக்க வேண்டுமா? இலவச ஆலோசனை பெற இன்றே, இப்போதே அழையுங்கள்**

M. Karthik தொலைபேசி எண் - 647 519 0623


# சுனாமியின் பெயரால்

03ஆம் பக்கத் தொடர்ச்சி

சுதந்திரமான ஜனநாயக அமைப்பிலும், குழந்தைகளே அதிகம் பலியிடப்படுகின்றனர். அடுத்தது பெண்களே. காட்டுமிராண்டிச் சமூகத்தில் கடவுளுக்கு உயிர்களை பலியிட்ட போது, குழந்தைகளே நேர்த்திப் பொருளாகி கொல்லப்பட்டனர். இதையே இயற்கையும் செய்துவிட்டது. பலவீனமானவர்கள் மீதான ஒரு அராஜகமாக இது வெளிப்பட்டது.

பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்களை எடுப்பின், மொத்தமாக 77161 மாணவர்கள் பாதிக்கப்பட்டனர். இதில் 40000 க்கும் மேற்பட்டவர்கள் வடக்குகிழக்கு பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள். இதிலும் கிழக்கே அதிகம் பாதிப்புக்குள்ளாகியுள்ளது. கிட்டத்தட்ட 18000 பேர் அம்பாறை மாவட்டத்தினையும், 11514 பேர் மட்டக்களப்பு மாவட்டத்தினையும் சேர்ந்தவர்கள். மிகவும் பின்தங்கியதும், பிரதேச ரீதியாக தாழ்த்தப்பட்ட, அதிக இன மற்றும் வர்க்க ஒடுக்குமுறைக்குள்ளான ஒரு பிரதேசத்தின் எதிர்காலத் தலைமுறையின் அவலம் நிரந்தரமாக்கப்பட்டுள்ளது. அடிப்படைவசதிகள் அனைத்தையும் இழந்து, வறுமையே தலைவிதியாக கொண்ட ஒரு பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள நிலைமை, ஒரு சமூக முன்முயற்சி ஊடாக மட்டும்தான் மீட்கமுடியும். அதிகார வர்க்கங்களாலும், நிவாரணத்தை சூறையாடுவதை குறிக்கோளாக கொண்ட பேரங்களே தேசியமாகிப் போன இன்றைய எமது சமூக அவலத்தில், இந்த குழந்தைகளின் கதி நிரந்தரமாகவே தற்குறியாக்கப்படுகின்றனர்.

இதைவிட வடக்கு கிழக்கைச் சேர்ந்த 2407 பாடசாலை மாணவர்கள் உயிரிழந்துள்ளனர். 29 ஆசிரியர்களும் உயிரிழந்துள்ளனர். மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் 54 பாடசாலைகள் முழுமையாகவும், 67 பாடசாலைகள் பகுதியாகவும் சேதமடைந்துள்ளன. கல்வி வலய ரீதியாக உயிரிழந்த மாணவர்கள் கல்முனை-1502, மூதூர்-217, மட்டக்களப்பு-235, அக்கரைப்பற்று-141, திருகோணமலை -38, முல்லைத்தீவு-250, கல்குடா-125 ஆகும். வடக்கு கிழக்கில் 2125 பேர் தாய் அல்லது தந்தையை இழந்துள்ளார்கள். அம்பாறை மாவட்டம்-954, மட்டக்களப்பு மாவட்டம்-699, முல்லைத்தீவு மாவட்டம்-393, யாழ். மாவட்டம்-47, திருகோணமலை மாவட்டம் 32 ஆகும். 737 பேர் தாய் தந்தை என இருவரையும் இழந்துள்ளார்கள். மட்டக்களப்பு மாவட்டம்-406, அம்பாறை மாவட்டம்-162, திருகோணமலை மாவட்டம்-35, முல்லைத்தீவு மாவட்டம்-94, யாழ். மாவட்டம்-39, கிளிநொச்சி மாவட்டம்-01,மாகும்.

பாடசாலை மாணவர்களின் இறப்பு முதல் பெற்றோரை இழத்தல் பெருமளவில் கிழக்கையும், குறிப்பாக அம்பாறையையும் சேர்ந்தாக உள்ளது. தெற்கு பற்றி துல்லியமான புள்ளிவிபரத்தை பெறமுடியவில்லை. ஆனால் ஒப்பீட்டளவில் கிழக்கே அதிக சேதத்தை அனைத்துதுறையிலும் சந்தித்துள்ளது. இதில் அம்பாறையே மிகக் கடுமையான அழிவை சந்தித்தது. ஆனால் அதிகம் புறக்கணிப்புக்கும், அதிகம் செய்தி தணிக்கைக்கும் உள்ளாகும் பிரதேசமும் இதுவாகும். இந்த பிரதேசத்தின் மனித அவலங் கள் இலங்கை மக்களும் சரி, உலக மக்களும் அறிந்த கொள்ள முடியாத சூனியத்துக்குள் தமிழ் சிங்கள இனவாதிகள் இட்டுச் சென்றுள்ளனர். இதன் மூலம் அந்த மக்களின் அவலத்தின் மேல்: தான், மற்றைய இனங்கள் பிரதேசங்கள் மீள்காட்டுமானம் பற்றி திட்டமிடுகின்றனர்.

இதே காலத்தில் மற்றொரு அதிர்ச்சி வெளிவந்துள்ளது. வடக்கு கிழக்கில் உள்ள 57 பாடசாலைகளில் 2005 முதல் ஆங்கில மொழி மூலம் கல்வி கற்பிக்க உள்ளதாக அறிவித்துள்ளனர். இத் திட்டத்தின் கீழ் 6ம் வகுப்பு முதல் க.பொ.த உயர்தரம் வரை சகல பாடங்களும் ஆங்கிலம் மூலமாகவே கற்பிக்கப்படவுள்ளதாகவும், மாகாணங்களுக்குத் தேவையான புத்தகங்களையும் கல்வி வெளியீட்டுத் திணைக்களம் அச்சிட்டு கொடுத்துள்ளது. தமிழ்மொழிக் கல்வியை திட்டமிட்டு அழிக்க, தமிழ் தேசியவாதிகளின் துணையுடன் பெருமெடுப்பிலான ஒரு முயற்சி தொடங்கியுள்ளது. தமிழ் தேசியவாதிகளினதும், 'தேசிய தலைவரின்' வழிகாட்டலில் இயங்கும் புலிகளின் ஆதரவுடனும், அங்கீகரிப்புடனும், இந்த மொழி அழிப்பு தொடங்கியுள்ளது. இது மற்றொரு சுனாமியாகி, தமிழ் மொழியை அழிக்கத் தொடங்கியுள்ளது. அன்னிய மொழிக் கல்வி, வாழும் மக்களின் மொழியுரிமையை மறுப்பதுடன், கல்வி மீதான வறிய மக்களின் கற்கும் அடிப்படை உரிமையை திட்டமிட்டே புறக்கணிக்கின்றது. இதன் மூலம் உலகமயமாதலுக்கும், ஏகாதிபத்தியத்துக்கும் சேவை செய்யும் ஒரு கல்விக் கொள்கையை இலங்கை இனவாதிகளும் தமிழ் இனவாதிகளும், அமுல் செய்ய தொடங்கியுள்ளனர். இது சுனாமி அழிவைவிட மிகப்பயங்கரமானது. இதில் கட்டாய சிங்கள மொழித் திட்டத்தை தமிழ்தேசியம் எதிர்த்தே போலியாகியுள்ளது.

16. நிவாரணமும் மோசடிகளும்.

உலகை சூறையாடும் திருடர்களை ஒழுங்குக்குட்படுத்தி, அதை அமைதியாக கூட்டாக திருட உதவும் ஐ.நா இலங்கை உட்பட சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட 20 லட்சம் மக்களுக்கு ஆறு மாதகாலத்துக்கு உணவுப் பொருள்களை வழங்கும் ஒரு திட்டத்தை அறிவித்துள்ளது. இந்த நிவாரணம் தான் இன்று மெதுவாக மக்களிடம் பல இடைச் சூறையாடல்களை கடந்து செல்லத் தொடங்கியுள்ளது. ஐ.நா வழங்கும் இந்த உதவிக்கு ஏகாதிபத்தியமே நிதி வழங்குகின்றது. ஆனால் மறுபக்கம் வறுமையில் மடிந்துவரும் ஆபிரிக்க மக்களின் நிவாரணம் வெட்டப்பட்டே, இந்த ஆறுமாத உதவி பற்றி பீற்றப்படுகின்றது. இதை ஐ.நாவே ஒத்துக் கொண்டு, ஏகாதிபத்தியதிடம் மேலதிக நிதியை கோருகின்றது. இது ஒரு முரணான மக்களுக்கு எதிரான உலக வக்கிரம் தான்.

17. இலங்கைக்கு ஜனவரி 22 வரை 58 நாடுகளிடமிருந்து 256 விமானங்கள் மற்றும் கப்பல்கள் மூலம் 43236 தொன் நிவாரணப் பொருட்கள் சுனாமியின் பெயரில் வந்திறங்கின. என்ன மனிதாபிமானம்? என்ன அக்கறை? சொந்த மக்களை பட்டினியில் வைத்திருப்பதே ஜனநாயகமாக கருதும் இவர்கள் தான், உதவிப் பொருட்களை அனுப்புகின்றனர். இப்படி அனுப்பிய பொருளில் 5, 6 வருடங்களுக்கு முன்பாகவே திகதி இட்டு பாவனைக்கு உதவாது என்று எறியவேண்டிய உணவுப் பொருட்களும் உள்ளடங்கும். இதைவிட ஐரோப்பிய மிருகங்களுக்கு என தயாரிக்கப்பட்ட உணவும் அடங்கும். பாவனைக்கு உதவாது என வெள்ளையர்கள் வீடுகளில் கழித்த பழைய உடுப்புகள் முதல் பல கழிவுகள் உதவியின் பெயரில் வந்து குவிந்துள்ளது. இப்படியான கழிவுகளை எல்லாம் எப்படி அகற்றுவது என்ற தெரியாத நிலையில், அரசு திணறுகின்றது. உண்மையில் இப்படி திரட்டி அனுப்பும் கழிவுப் பொருட்கள் மூலம், மூலதனம் வரி குறைப்புக்குள்ளாகி லாபத்தையே அடைந்துள்ளது.

தொடர்ச்சி 22ம் பக்கம்


**விளம்பரம்** VLAMBARAM

விளம்பரம் பத்திரிகை விளம்பரம் பப்கேஷன்ஸ் ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள்.



**பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிகேஷன்ஸ். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.



Vlambaram, P.O. Box 37527, 31 Tapscott Road, Toronto, ON M1B 5P9, Canada

TEL: 416-282-8059 FAX: 416-282-4978

e-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com



HOME INSPECTION

• வீடு தரமானது என உறுதிப்படுத்திக் கொள்ள... • வீடு பராமரிப்பு பற்றி விளக்கமாகத் தெரிந்து கொள்ள...

**ந. தயாபரன்**

Certified Inspection Specialist

Expert Building Inspections LTD.

• Exceed the Standards • Industry Canada Registered • Professionals Serving the GTA • On site Report

24 /7 - Toll Free - 1.866.373.3315 416.727.8336

# சுனாமியின் விளைவு?

சென்ற இதழ் தொடர்ச்சி...

## 11. சுனாமியின் விளைவு என்ன?

ஆசிய அபிவிருத்திவங்கி தனது அறிக்கை ஒன்றில் சுனாமியைத் தொடர்ந்து இலங்கையில் 250000 பேர் வறியவர்களாகி விட்டனர் என்று கூறுகிறது. மீன்பிடி மற்றும் உல்லாசத்துறையைச் சார்ந்து வாழ்ந்த 4 லட்சம் பேர் ஒரு நேர உணவுக்கான தமது தொழிலை இழந்துள்ளனர். இலங்கையில் வேலையற்றோர் அளவு சுனாமிக்கு முன்னர் 9.2 சதவீதமாக இருந்தது. இது சுனாமியின் பின் 20 சதவீதமாக உயர்ந்துள்ளது. கொல்லப்பட்டவர் எண்ணிக்கை அண்ணளவாக 38 ஆயிரமாக அறிவிக்கப்பட்டுள்ளது. காயமடைந்தோரின் எண்ணிக்கை 15 ஆயிரமாகும். இந்தத் தொகை இறப்பின் கொடூரத்தின் வீச்சைக் காட்டுகின்றது. சேதமடைந்த வீடுகள் முற்றாகவோ அல்லது பகுதியாகவோ 140 000 மாகும். சேதமடைந்த உல்லாசப் பயண விடுதிகள் எண்ணிக்கை 50 ஆகும்.

இலங்கை மத்திய வங்கி மொத்த இழப்பை 15000 கோடி ரூபாவாக அறிவித்துள்ளது. உதவி என்ற பெயரில் கடன் வழங்கும் சர்வதேச அமைப்புகள் இலங்கைக்கு ஏற்பட்டுள்ள பொருளாதார இழப்பை 100 கோடி அமெரிக்க டொலர்கள் (10000 கோடி ரூபா) என மதிப்பிட்டுள்ளது. இலங்கைக்கு கடன் வழங்குபவர்கள் நாட்டை புனரமைக்க 150 கோடி டொலர்கள் (15000 ஆயிரம் கோடி ரூபா) தேவை எனவும் மதிப்பிட்டுள்ளனர். இப்படி ஒரு பொதுவான சித்திரத்தை ஆளும் வர்க்கங்கள் தருகின்றன. இந்த சேதத்தை துறை சார்ந்து முன் வைப்பதைப் பார்ப்போம்.

1. கல்வி சார்ந்த கட்டிடத்துறைக்கு 270 கோடி ரூபா (168 பாடசாலையும், 4 பல்கலைக்கழகமும், 18 தொழில்பயிற்சி நிலையமும் சேதமடைந்தாக அறிவித்துள்ளனர்.) இழப்பு ஏற்பட்டள்ளது. இதைவிட கல்விதுறைக்கு நேரடி மற்றும் மறைமுக இழப்பு சார்ந்த 470 கோடி ரூபா ஏற்பட்டுள்ளது.

2. சுகாதாரத்துறைக்கு 630 கோடி ரூபா சேதம் ஏற்பட்டள்ளது. (இதில் 92 மருத்துவமனைகள் சேதமடைந்தன) இதைவிட வைத்திய உபகரணங்கள் மற்றும் பல்வேறு மருத்துவத்துறை சார்ந்து 880 கோடி ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது.

3. வீடமைப்புக்கு 430 முதல் 510 கோடி ரூபா சேதம் ஏற்பட்டுள்ளது. மொத்தமாக 99480 வீடுகள் முற்றாக அழிந்துள்ளது. 44290 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

4. விவசாய துறைக்கு அண்ணளவான 30.4 கோடி சேதம் ஏற்பட்டுள்ளது. கடல் நீர் புகுந்ததால் நான்கு வருடம் விவசாயம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. மொத்தமாக இப்படி 2308 ஹெக்டேர் நெற்செய்கையும், 589 ஹெக்டேர் தானிய பயிர் செய்கை நிலமும், 473 ஹெக்டேர் காய்கறி தோட்டமும், 201 ஹெக்டேர் பழச் செய்கை நிலமும் சேதமடைந்துள்ளது. இதைவிட 63000 பறவை இனங்களும், 6500 மாடுகளும், 3100 ஆடுகளும் கொல்லப்பட்டன.

5. தொழில் இழப்பு சார்ந்து 1470 கோடி ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது. ஐந்து ஆயிரம் சிறு வியாபாரிகள் தொழிலை இழந்துள்ளனர். 2800 விடுதிகள் சேதமடைந்தன. இதனால் 40000 பேர் தொழிலை இழந்துள்ளனர். உல்லாசத்துறை சார்ந்து 27000 பேர் தமது தொழிலை இழந்துள்ளனர்.

**பி. இரயாகரன்**

6. மின்சாரத்துறைக்கு ஏற்பட்ட இழப்பு 100 கோடி டொலர். மொத்தமாக 70000 வீடுகளுக்கு மேல் மின் இணைப்பை இழந்துள்ளன. இதைவிட 70000 மின்மானிகள் சேதமடைந்துள்ளது. 88 உப மின்நிலையங்கள் சேதமடைந்துள்ளது. இதற்கு 810 கோடி ரூபா சேதம் எற்பட்டள்ளது.

7. சுத்தமான குடிநீருக்கு ஏற்பட்ட இழப்பு 440 கோடி ரூபா. மொத்தமாக 12000 கிணறுகள் தேசதமடைந்துள்ளது. 50000 கினறுகளில் கடல் புகுந்து உவராக்கியுள்ளது. நீர்விநியோக செய்த குழாய்கள் சேதமடைந்துள்ளது. இவற்றின் இழப்பு 1220 கோடியாகும்.

8. போக்குவரத்துக்கு ஏற்பட்ட சேதம் 150 கோடி ரூபா. இதைவிட நாள் ஒன்றுக்கு 78000 பேர் பயணம் செய்த கரையோர போக்குவரத்து 20 கிலோமீற்றருக்கு சேதமடைந்துள்ளது. இதைவிட அது சார்ந்த தகவல்துறையும் சிதைந்துள்ளது. மொத்தமாக 1360 கோடி ரூபா தேவை. இதைவிட வீதிப்போக்குவரத்துக்கு ஏற்பட்ட சேதம் 630 கோடி ரூபாவாகும். 690 கி.மீற்றர் நீளமான பாதை சேதமடைந்துள்ளது. இதைவிட 1100 கி.மீற்றர் உள்ளூர் வீதிகளும், பாலங்கள் கூட சேதமைந்துள்ளது. இதற்கு 2100 கோடி ரூபா தேவை.

9. மீன்பிடி 1010 கோடி ரூபா தேவை. 27 ஆயிரம் கடல் தொழிலாளர்ளும் (மீனவர்களும்) அவர்களின் குடும்பத்தினரும் இறந்துள்ளனர். 90000 கடல் தொழிலாளர் (மீனவ குடும்பங்கள்) புலம் பெயர்ந்துள்ளனர். 29700 மீன்பிடிக் கலங்கள் முற்றாக சேதமடைந்துள்ளது. இதைவிட வெளியிணைப்பு இயந்திரங்கள், ஐஸ்தொழில்சாலைகள், மீன்பிடி துறைமுகங்களுக்கு ஏற்பட்ட சேதம் 1240 கோடி ரூபாவாகும்

10. உல்லாசத்துறைக்கு ஏற்பட்ட சேதம் 2620 கோடி ரூபாவாகும். இதனால் 50000 பேர் நேரடியாகவும், 65000 பேர் மறைமுகமாகவும் வேலையை இழந்துள்ளனர்.

12. உலகவங்கி தனது அறிக்கை ஒன்றில் கடல்கோள் அனர்த்தம் காரணமாக இலங்கையின் சுற்றுலாத் துறைக்கு 200 மில்லியன் அமெரிக்க டொலர் (2000 கோடி ரூபா) சேதம் ஏற்பட்டுள்ளதாக அறிவித்துள்ளது. 2004 ஆம் ஆண்டிலேயே 5.65 இலட்சம் சுற்றுலாப் பயணிகள் வந்திருந்தனர். இது 2005 இல் 6 இலட்சமாக அதி-கரிக்குமென எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் சுனாமியினால் இது ஒரு லட்சத்தால் குறையும் என்று அறிவித்துள்ளது. இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுற்றுலாத்துறை 2 சதவீதமாக உள்ளது. கடல்கோள் அனர்த்தத்தால் 100 இற்கும் அதிகமான ஹோட்டல்கள் முற்றாக சேதமடைந்தோ அல்லது அழிந்தோ போயுள்ளது. உண்மையில் சுற்றுலாத்துறைக்கு ஏற்பட்ட அழிவு, குறித்த நாட்டை மட்டும் பாதிக்கவில்லை. சர்வதேச சுற்றுலாத்துறையையும், சர்வதேச விமான துறையையும் கூட நேரடியாக பாதித்துள்ளது. இதனால் சர்வதேச மூலதனங்கள் சில கடும் நெருக்கடிக்குள்ளாகியுள்ளது.

| | |
|---|---|
| இறந்தோரின் எண்ணிக்கை ஏறக்குறைய | 40.000 |
| வீடுகளை இழந்தோர் | 100.000 பேர் |
| காணாமற்போனோர் | 6.000 பேர் |
| காயமுற்றோர் | 15.000 பேர் |
| நாட்டை மீளகட்டியெழுப்பும் பணிக்கு செலவாகும் தொகை | 348.33 கோடி ரூபா |

| | |
|---|---|
| முதலாவது கட்டம் | 27.04 கோடி ரூபா |
| இரண்டாவது கட்டம் | 168.83 கோடி ரூபா |
| மூன்றாவது கட்டம் | 152.57 கோடி ரூபா |
| வீதிப்போக்குவரத்து சீரமைப்பிற்கு | 66.14 கோடி ரூபா |
| புகையிரத போக்குவரத்து | 43.14 கோடி ரூபா |
| தொலைத் தொடர்பு | 8.7 கோடி ரூபா |
| நீர்விநியோகம், சுத்திகரிப்பு | 41.96 கோடி ரூபா |
| துறைமுக மீள்கட்டுமானம் | 3.2 கோடி ரூபா |
| மின்சாரம் | 12.6 கோடி ரூபா |
| கல்வி | 13.2 கோடி ரூபா |
| சுகாதாரம் | 11.8 கோடி ரூபா |
| சமூக நலன் | 60.0 கோடி ரூபா |
| வீடமைப்பு நகர அபிவிருத்தி | 52.0 கோடி ரூபா |
| மீன்பிடி அபிவிருத்தி | 33.0 கோடி ரூபா |
| தொழிற்சாலைகள்புனரமைப்பு | 3.5 கோடி ரூபா |
| உல்லாசப் பயணத்துறை | 32.8 கோடி ரூபா |
| சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு | 7.5 கோடி ரூபா |
| வர்த்தக முதலீடுகள் அபிவிருத்தி | 5.5 கோடி ரூபா |
| சட்ட ஒழுங்கு பாதுகாப்பு | 4.5 கோடி ரூபா |

| | இடம்பெயர்வு | இறப்பு | காயம் | காண வில்லை | முற்றாக வீடு அழிவு | பகுதியாக வீடு அழிவு | அகதி முகாம்கள் |
|---|---|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 39933 | 2640 | 1647 | 540 | 6084 | 1114 | - |
| கிளிநொச்சி | 1603 | 560 | 670 | 1 | 1250 | 4250 | 2 |
| முல்லைத்தீவு | 22557 | 2771 | 2590 | 552 | 3400 | 600 | 23 |
| திருகோணமலை | 81643 | 1078 | - | 337 | 5974 | 10394 | 42 |
| மட்டக்களப்பு | 59000 | 2840 | 2375 | 1033 | 15939 | 5665 | 45 |
| அம்பாறை | 75492 | 10436 | 120 | 876 | 29077 | - | 82 |
| அம்பாந்தோட்டை | 17382 | 4500 | 361 | 963 | 2303 | 1744 | 4 |
| மாத்தறை | 13321 | 1342 | 6652 | 613 | 2362 | 5659 | 30 |
| காலி | 5504 | 4216 | 313 | 554 | 5525 | 5966 | 46 |
| களுத்துறை | 23541 | 256 | 400 | 148 | 2572 | 2930 | 16 |
| கொழும்பு | 30652 | 79 | 64 | 12 | 3398 | 2210 | 28 |
| கம்பஹா | 21354 | 6 | 3 | 5 | 292 | 307 | 2 |
| புத்தளம் | 66 | 4 | 1 | 3 | 23 | 72 | 2 |
| மொத்தம் | 392048 | 30957 | 15196 | 5637 | 78199 | 40911 | 322 |

13. இந்த சிதைவில் இருந்து மீள, ஆரம்ப மீள் கட்டுமானத்தைச் செய்ய ஒரு திட்டத்தை அரசு முன்வைக்கின்றனர். இந்த வகையில் இவை உத்தியோகபூர்வமான அறிக்கையாக உள்ளது. சில தகவல்கள் இல்லாத போதும், அண்ணளவாக இவை சரியானவை. இலங்கையின் இழப்பின் சில பக்கங்களை காட்டுகின்றது. இந்த மனித இழப்பின் மீது, உண்மைகளை திரிபுபடுத்தி இனவாத அரச-ியல் கறைபடிந்து வெளிவருகின்றது. நிவாரணம், மீட்பு என்ற பெயா-ில் இனவாத அரசியல் வக்கிரம் அரங்கேறி, ஒவ்வொரு இனத்தையும் அதிகாரத்தில் உள்ளவர்கள் எதிர்கெதிராக நிறுத்துகின்றது. மனிதன-ின் வாழ்வியல் அழிவை ஒருதலைபட்சமாக ஓர் இனத்தின் மீதானதாக காட்டி, அனைத்து மீள் கட்டுமானத்தையும் ஓர் இனத்தின் பெயரால் சூறையாடும் இனவாத பிரச்சாரக் கோட்பாடு கட்டமைக்கப்படுகின்றது. இன அதிகாரத்துக்காக போராடும் பலம் வாய்ந்த இனங்கள் சார்பாக எழும் இனவாதம், பலம்குன்றிய இனங்கள் மேலாக நடத்துகின்றனர். இப்படி உருவாகும் இனவாத வக்கிரங்கள் மூலமான மீட்பு, மற்றும் மீள் கட்டுமானம் உண்மையில் மக்களின் நலனில் இருந்து பிறக்கவில்லை. மக்களின் பெயரால் இனப்பிரிவுகளின் அதிகாரத்தை பெற்றவர்கள் சுருட்டிக் கொள்ளும் உள்ளடக்கமே முதன்மை பெற்றுள்ளது. இந்த இனவாத அரசியல் கபடத்தை நிர்வாணப்படுத்த, இனரீதியாக, பிரதேசரீதியான உண்மையான புள்ளிவிபர ஆய்வை வைப்பது அவசியமாகின்றது.

| | இடம்பெயர்வு | இறப்பு | காயம் | காண வில்லை | முற்றாக வீடு அழிவு | பகுதியாக வீடு அழிவு | அகதி முகாம்கள் |
|---|---|---|---|---|---|---|---|
| மொத்தம் | 392048 | 30957 | 15196 | 5637 | 78199 | 48911 | 322 |
| வடக்கு கிழக்கு | 280228 | 20352 | 7402 | 3339 | 61724 | 29993 | 194 |
| வடக்கு | 64093 | 5971 | 4907 | 1093 | 10734 | 5964 | 25 |
| முல்லைத்தீவு | 22557 | 2771 | 2590 | 552 | 3400 | 600 | 23 |
| கிழக்கு | 216135 | 14381 | 2495 | 2246 | 50990 | 24029 | 169 |
| அம்பாறை | 75492 | 10436 | 120 | 876 | 29077 | 8000 | 82 |
| தெற்கு | 111820 | 10403 | 7794 | 2298 | 16475 | 18888 | 124 |

## 14. மீனவர்களின் அவலம்

சுனாமி அனர்த்தத்தால் இலங்கை முழுமையிலும் 30 ஆயிரம் மீன்பிடிப் படகுகள் மற்றும் கலங்கள் அழிந்துள்ளன. இலங்கையில் படகு உற்பத்தி செய்யப்படும் 50 மையங்கள் அழிந்துள்ளன. 10 மீன்பிடித்துறைகள் அழிந்துவிட்டன.

இதிலும் அம்பாறை மீனவர்களின் இழப்பு மிகக் கடுமையானது. அம்பாறையில் 1035 மீனவர்கள் பலியாகினர். அம்பாறையில் மட்டும் கடல் தொழிலில் 500 கோடி இழப்பு ஏற்பட்டுள்ளது. 3250 மீனவர்களின் வீடுகள் முற்றாக அழிந்துள்ளது. இதன் மொத்த பெறுமானம் 161.5 கோடி ரூபாவாகும். பகுதியாக 1735 வீடுகள் சேதமடைந்தன. இதன் பெறுமதி 24.7 கோடி ரூபா. 7501 மீனவ குடும்பங்களைச் சேர்ந்த 35235 பேர் இடம்பெயர்ந்தனர். படகு, தோணி உட்பட மீன்பிடி உபகரணங்களுக்கு ஏற்பட்ட இழப்பு 130 கோடி ரூபா. மீனவர் நலன்புரி நிலையங்கள், மீனவ காரியாலயங்கள், மீனவர் தங்குமிடங்கள் ஆகியவற்றிற்கு ஏற்பட்ட சேதம் 15 கோடி ரூபா. அம்பாறை கரையோரப் பிரதேசங்களில் அண்ணளவாக 10 ஆயிரம் மீனவர்களின் வீடுகள் முழுமையாக அழிந்துள்ளது. 1500 இற்கு மேற்பட்ட மீன்பிடிக்கலங்கள், இயந்திரங்கள் சிதைந்துள்ளன. 60 கிலோமீற்றர் நீளமான மீன்பிடி வீதிகள், மீன்பிடிக் காரியாலயங்கள் அழிந்துள்ளன.

வடக்குகிழக்கு மாகாணத்தில் அழிவுக்குள்ளான மீனவ சங்கங்களின் எண்ணிக்கை 184 ஆகும். இதில் அழிவுக்குள்ளான அச் சங்கங்களுக்குரிய மீன்பிடிப் படகுகளின் எண்ணிக்கை 1160 ஆகும். இவற்றின் பெறுமதி மேலே 78.75 கோடி ரூபாவாகும். வடக்கு கிழக்கில் அழிந்த மீன்பிடிப் படகுகள் 13.698 யாகும். இவற்றின் பெறுமானம் 382.3 கோடி ரூபாவாகும்.

இப்படி ஒரு மீன்பிடிச் சமூகம் முற்றாக சிதைந்துள்ளது. குறிப்பாக உற்பத்தியில் வடக்கு கிழக்கில் பிரதான வருமானத்தை விவசாயத்துக்கு அடுத்தாக மீன்பிடியே வழங்கியது. இதனால் பல பத்தாயிரம் மக்களின் அடிப்படை வாழ்வியல் உரிமை அழிந்துள்ளது. இதில் இருந்து மீள்வது என்பது பல தடைகளையும், முட்டுக்கட்டைகளையும் கடந்தாக வேண்டும். உண்மையில் இதை எதிர்கொண்டு நிமிர்ந்து நிற்க முடியாத வகையில், அடிப்படையாகவே மனிதனிடம் காணப்படும் போராடும் திறனை மக்கள் சமூகம் இழந்து நிற்கின்றது. சிங்கள இனவாதமும், குறுந்தேசிய தமிழ் இனவாதமும், அதிகாரத்தில் உள்ளவர்களின் பொதுவான சூறையாடல்களும், இந்த மக்களின் கண்ணீர் வாழ்வை நிரந்தரமாக்கி வருகின்றது.

## 15. பாதிக்கப்பட்ட சிறுவர்கள்

சுனாமியில் அதிகளவில் பாதிக்கப்பட்டவர்கள் சிறுவர்களே. அடுத்து பெண்களே. சேர்க்கையாக மனிதன் உருவாக்கிய சுரண்டும்

தொடர்ச்சி 02ம் பக்கம்

APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்பு திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

Ontario's Drive Clean
Accredited Test & Repair Facility

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing

- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

416-285-4998

435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6

SPECIAL



# ஏய் நீ ரொம்ப அழகாயிருக்கே!

01ஆம் பக்கத் தொடர்ச்சி

செயல்பாடுகள் பற்றியும், கணினி மூலம் முகச் சீரமைப்பு செய்வது எப்படி என்பதையும் விரிவாக விளக்கியிருக்கிறார். படித்துத் தெரிந்து கொள்ளுங்கள். பரந்து விரிந்த உலகைக் கையடக்க உலகமாக மாற்றி அமைத்த பெருமை கணினிக்கு மட்டுமே உண்டு. ஒவ்வொரு அறிவியல் துறையும் கணினியைச் சார்ந்தே வளரவேண்டிய கட்டாயச் சூழ்நிலையில் உள்ளது. கணினி மனித சிந்தனையின் அடிப்படையில் மேற்கொள்ளும் எந்தச் செயலையும், அதாவது மனிதனின் சிந்தனைத் தேவைகளை விரிவாகவும், விரைவாகவும் மனிதனின் கட்டுப்பாட்டுக்குள் நின்று தானாகவே செய்து முடிக்கும் திறன் கொண்டது.

பயன்பாட்டாளரின் தேவைக்கேற்ப அவர்தரும் தகவல்களை (DATAS) ஏற்றுச் சேமித்து, குறிப்பிட்ட செயல் முறையில், அத்தகவலை ஆராய்ந்து சிக்கல் தீர்க்கும் மின்னணு சாதனமே கணினி. இது ஒரு செயற்கை மூளை. கணினியின் பயன்பாடு மருத்துவத்துறையில் நாளுக்கு நாள் அதிகரித்து வந்து கொண்டிருக்கிறது. கணினியின் உதவியின்றி மருத்துவ மையங்கள் சரியாக செயல்பட இயலாது என்ற நிலையும், கணினி மருத்துவ பயன்பாட்டாளருக்கு மிக அவசியம் என்ற நிலையும் ஏற்பட்டுள்ளது.





மருத்துவத் துறையில் அடிப்படைக் காரணங்களுக்காக கணினி எந்தெந்த விதங்களில் பயன்படுகிறது என்பதைப் பார்ப்போமானால்,

1. நோயாளர் நோய்த் தகவல் பதிவதற்கு
2. நோய் கண்டறிதல் மற்றும் சிகிச்சை முறைகளுக்கு
3. அறுவை சிகிச்சை முறைகளை ஆய்வதற்கு
4. நோயாளிக்கு சிகிச்சை பற்றி அறியச்செய்வதற்கு
5. மருத்துவரை சந்திக்க நியமனம் கோருபவர்கள் தகவலைப் பதிவதற்கு
6. ஆலோசனை மற்றும் நோயறிதல் குறித்த கடிதங்களுக்கு பதில் அனுப்புவதற்கு
7. வரவு செலவு கணக்குகள் பதிய
8. விவரப்பட்டியல் (Inventory) மற்றும்
9. தேவையானவற்றை தயார்படுத்துவதற்கு கணினி அவசியம் தேவை.

தற்போதைய நோயறிதலில் கணினியை அடிப்படையாகக் கொண்ட சிப்பு (Chip) ஒன்றில் பல் மருத்துவத்துறையில் நோயறிதல், முகச்சீரமைப்புத் திட்டத்திலுள்ள வித்தியாசங்கள், (Cephalograms) பயன்பாடு மற்றும் இலக்க முறை புகைப்படங்கள் (Digital Photographics) பல் கட்டும் சிகிச்சை (Prosthodontists) Endodontists மற்றும் பல் வேர்ச்சிதைவுகளை சீராக்குதல் (Root canal) சிகிச்சைக் காணத் திட்டம் மற்றும் சிகிச்சை முறைகளின் மாதிரியைத் தயார் செய்யலாம். முகச் சீரமைப்பு அறுவை சிகிச்சை செய்து கொள்ளும் முன்பு துருத்திக் கொண்டிருக்கும் பற்கள், ஒட்டியிருக்கும் தாடைகள், கோணலாக இருக்கும் வாய் போன்றவற்றை கணினித் திரையில் உருவாக்கலாம். இதன் மூலம் அறுவை சிகிச்சையை எவ்வாறு செய்ய வேண்டும், எவ்வாறு செய்தால் அழகாக இருக்கும், இதற்கு எதுபோன்ற கருவிகள், இணைப்புகள் (Bridges) போன்றவை தேவைப்படும் என்பதையெல்லாம் கணினியில் உருவாக்கிப் பார்க்கலாம்.

### நோயாளிக்கு விளக்குதல் (Patient Education) -

நோயாளியின் புகைப்படத்தை நுண்ணாய்வுக் கருவி (Scan) மூலம் பதிந்து திரையில் கொண்டு வந்து முகச்சீரமைப்புப் பகுதி தொடர்பான எல்லாவிதமான முறைகளையும் நோயாளி நன்றாகப் புரிந்து கொள்ளும் விதத்தில் விளக்க முடியும். சிறிய அளவிலான பற்சொத்தை முதல் தொட இயலாத பகுதியில் உள்ள பாதிப்பு வரை திரையில் பெரிதாக்கிக் காட்டுவதால் நோயாளி தன்னுடைய சந்தேகம் மற்றும் கவலைகளை விட்டுவிட்டு மருத்துவரின் நோக்கங்களையும், சிகிச்சை முறையின் இலக்கு போன்றவற்றையும் புரிந்து கொண்டு ஒத்துழைப்பு அளிக்க முடியும். டாக்டர். எஸ். எம். பாலாஜி அவர்கள் கணினியைப் பயன்படுத்தி எந்தளவு பல் மற்றும் முகச்சீரமைப்பு அறுவை சிகிச்சையை மேற்கொள்கிறார் என்பதைப் பார்ப்போம்.

கணினி மூலம் பல் மற்றும் முகச்சீரமைப்பு அறுவை சிகிச்சைகளை நூறு சதவீத வெற்றியுடன் முடித்து உலக அரங்கில் பிரபலமாகப் பேசப்படும் டாக்டர் பாலாஜி, முகச்சீரமைப்புக்கென்றே எம். எஃப் எஸ் (Mallofacial System) என்ற மென் பொருளை உருவாக்கிப் பயன்படுத்துகிறார்.

முகச்சீரமைப்பு என்றால் என்ன என்பதைப் பற்றி முதலில் அறிந்து கொண்டால் தான் மற்றவைகளை எளிதில் புரிந்து கொள்ள இயலும். மனித உடலில் தோன்றும் குறைபாடுகளில் மிக முக்கியமானது முக வளர்ச்சியின்மை. இது பல வகைப்படும். அவற்றுள்

1. மேல்தாடை முன்னோக்கி இருத்தல்
2. மேல் உதடு சிறியதாக இருத்தல்
3. கீழ்த்தாடை நீண்டு வளர்ந்து இருத்தல்
4. முகம் ஒரு பக்கம் கோணலாகி இருத்தல் போன்றவை.

இக்குறைபாடு உள்ளவர்கள் தாழ்வு மனப்பான்மையால் தவித்து, அடுத்தவர்களைப் போல அழகாக ஆக மாட்டோமா என்று ஏங்கத் தவித்த காலங்கள் உண்டு. அந்த ஏக்கங்களைப் போக்க கணினியின் துணையுடன் தனது மருத்துவ அறிவுத்திறனுடைய மென்பொருளைக் கொண்டும் இயற்கைப் படைப்பின் கோணல் முகங்களைக் கூட சரி செய்து அழகோவியங்களாக மாற்றுகிறார் இவர்.

டாக்டர் எஸ். எம். பாலாஜி மேற்கூறிய மென்பொருளைக் கொண்டு கோணல் முகம் கொண்டவர்கள், அறுவை சிகிச்சைக்குப் பிறகு தங்களின் முகம் எப்படியிருக்கும், எப்படி இருக்க வேண்டும் என்பதைப் பார்த்துக் கொள்ளலாம்.

டாக்டர் திரு. பாலாஜி அவர்கள் அன்பு அறிவிப்பாளர் B.H. அப்துல் ஹமீத் அவர்களால் எனக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டவர். அவருடைய ரொறொன்ரோ வருகையை ஒட்டி இச் சிறப்புக் கட்டுரையை ‘விளம்பரம்’ பத்திரிகைக்குச் சமர்ப்பித்துள்ளேன்.

சமீபத்தில் நடந்த ஐந்தாவது ஆசிய முகச் சீரமைப்பு நிபுணர்கள் சம்மேளனத்தில் உதடு - அன்னப்பிளவு சீரமைப்பு செய்த பின்னும் முகக்குறைபாடு நீங்காதவர்களுக்கு உதடுகளையும் மூக்கையும் ஒரு சேர சீரமைக்கும் ‘எபிப்ளாப்’ சிகிச்சை முறை பற்றி டாக்டர் பாலாஜி சமர்ப்பித்த ஆராய்ச்சிக் கட்டுரைக்காக தங்கப் பதக்கம் பெற்றார்.

இதற்கு நோயாளியின் தரப்பிலிருந்து முதலாவது பெறப்படுவது Ceph எனப்படும் தாடை, முக எலும்பின் ஊடுகதிர் (X-Ray) படமாகும். இதை நுண்ணாய்வுக் கருவி (Scanner) மூலம் பதிவு செய்து கணினியில் கொண்டு வந்து விடுகிறார். செருகுவட்டு (Floppy disk) மூலம் புகைப்படத்தை புகைப்படக் கருவியின் உதவியுடன் பதிவு செய்து அதையும் கணினியில் இணைக்கிறார்.

தாடை எலும்புகளில் உள்ள வளர்ச்சி மையங்களை (Growth points) சுட்டுக் கருவியின் (Mouse) துணைக் கொண்டு குறித்துக் கொள்கிறார். இதன்பிறகு அறுவைச் சிகிச்சை செய்து கொள்பவரின் புகைப்படத்தின் மீது 150 அளவு கோல்கள் மூலம்



“சூப்பர் இம்போஸ்” எனப்படும் (படத்தின் மேல் படம் வைக்கும்) முறையில் பலவிதமான நோயறிதல் வரையறைகளை தயாரித்து நோயாளி பற்றிய ஒரு துல்லியமான முடிவு எடுக்கிறார்.

ஒன்றன் மீது ஒன்றாக பல உருவங்களை ஏற்படுத்தி சூப்பர் இம்போஸ் செய்யப்பட்ட புகைப்படத்தில் நோயாளியின் முக எலும்பைப் பற்களோடுச் சேர்த்து எந்தத் திசையிலும் நகர்த்தலாம். இதைக் கொண்டு நோயாளி அழகு பெறுவதற்கு பொருத்தமான பகுதி எது என ஆராய்ந்திட கணினியில் உருவாக்கிய முக எலும்பைக் கடிகாரச் சுற்று முறையிலோ, கடிகார எதிர்ச்சுற்றுமுறையிலோ (Clock-Wise or Anti Clock Wise) மேல் நோக்கியோ, கீழ் நோக்கியோ, வலது மற்றும் இடது புறமாகவோ நகர்த்துகிறார். இதன் மூலம் நோயாளியின் புகைப்படத்தில் தோன்றும் மாறுதல்கள் ஒவ்வொன்றையும் தனித்தனியாகச் சேமித்து பாதுகாத்து வைத்து, நோயாளிக்கு சிகிச்சையளிக்கும் முறையைத் திட்டமிடுகின்றார்.

இது எல்லாவற்றுக்கும் மேலாக நோயாளிக்கு எவ்விதமான முக அமைப்பு பிடிக்கிறது என்பதைக் கேட்டறிந்து, எந்த அமைப்பைப் பொருத்தினால் எவ்விதமான முக அமைப்பு ஏற்படும் என்பதையெல்லாம் விளக்கிச் சொல்லி அவர்களுக்கு சிகிச்சையளிக்கிறார்.

பற்கள் கோணல் மாணலாகி, வசீகரமற்று எதிர்காலமே கருமை படர்ந்த இருள் சூழலில் வாழ்பவர்களுக்கு ஒரு அருமருந்தாக, அற்புதச் செய்தியாக, உடனடி தீர்வாக இருப்பதுதான் பல் சீரமைப்பு அறுவை சிகிச்சை என்பதாகும். நவீன சிகிச்சை முறையில் இதை எளிதாக சரி செய்து விடலாம். இதனால் முகம் அழகு பெறும். ஆக தாடை நீண்டு விட்டது என்றோ நீண்ட தாடையால் பற்கள் வெளியே நீண்டு அழகைக் கெடுக்கிறது என்றோ யாரும் கவலைப்பட வேண்டியதில்லை. நவீன சிகிச்சை மூலம் சரி செய்து முகத்தையே அழகுபடுத்தி விடலாம். முன் பக்க தாடை எலும்பு நீள்வதற்கு ஹோர்மோன் சுரப்பியில் ஏற்பட்ட மாற்றம் முக்கியக் காரணமாகி விடுகிறது. குழந்தைப் பருவத்தில் கை சூப்பும் பழக்கம் காரணமாகவும் தாடை எலும்பு நீண்டு வளர்ந்து பற்கள் உதட்டுக்கு வெளியே வந்து விடுகிறது.

தாடை சத்திரசிகிச்சை செய்யும் ஜெர்மன் நாட்டு சிகிச்சை முறையில் செலவுகள் அதிகமாகும் என்பது தவறான அபிப்பிராயம் ஆகும். இதுவரை இவரிடம் முகச்சீரமைப்பு சத்திரசிகிச்சை செய்து கொண்ட பத்தாயிரத்திற்கும் மேற்பட்டவர்களில் 2000க்கும் மேற்பட்டவர்கள் எளிமையான வாழ்க்கை வாழ்பவர்கள் ஆவார்கள். நவீன முறையில், உடைந்து விட்ட தாடை எலும்பை பிளேட் ஸ்க்ரூ போட்டு முறுக்கி இணைக்கப்படுவதால் நோயாளி சிகிச்சை முடித்த மறுநாளே சாப்பிட முடியும். நவீன தாடை எலும்பு முறிவு சிகிச்சை முறை இவரின் மருத்துவமனையில் சிறப்பாகச் செய்யப்படுகிறது.

எவ்வளவுதான் அழகாக இருந்தாலும் மேலும் மேலும் அழகாக வேண்டும் என்கிற இயற்கையுணர்வு பெண்களுக்கு இயல்பாகவே இருக்கிறது. அதைப்போலவே ஏதாவது ஒரு குறை இருக்கத்தான் செய்கிறது. இப்பொழுது இதை எப்படி தகுந்த மருத்துவரின் ஆலோசனை கொண்டு சீர் செய்யலாம் என்று பார்த்தோம்! இனி கவலை தேவைதானா!

*தகவல் தொகுப்பு - கே. ரி. சண்முகராஜா (வீணைமைந்தன்)*




**உங்கள் பிள்ளைச் செல்வங்களுக்கு எமது தாய் மண்ணுடன் ஒரு தொடர்பினை ஏற்படுத்த அல்லது உங்கள் ஓய்வு காலத்தை அங்கு இன்பமாகக் களித்திட இலங்கை இந்தியா போன்ற நாடுகளில் வீடு நிலங்களில் முதலிட எண்ணுகிறீர்களா?**

**நம்பிக்கையுடன் தொடர்பு கொள்ளுங்கள்**

*பரம்ஜி* - **416.230.1107**

**PARAM. G GNANASWARAN**
Sales Representative

**HOME LIFE GTA REALTY INC.**
1711 McCowan Rd., Suite 206, Scarborough, ON

HOMELIFE HIGHER STANDARDS

**416.321.6969**
**905.670.9969**
(Mississauga)
paramg@themathuram.com

# கிருமிகளுடன் சண்டை போடத் தயாராகும் கலங்கள்

## நீண்டகாலம் உயிர் வாழ்வதற்கான இரகசியங்கள் - 9

உயிர்ச்சத்து சி, மனிதர்களின் ஆயுளைக் கூட்டுகின்றது என்று உயிர்ச்சத்து ஆராட்சியாளர்கள் கூறுகின்றனர். முந்நூறு மில்லி கிராம் உயிர்ச்சத்து சி யை தினமும் எடுக்கின்ற ஆண்களில் ஆயுட்காலம் ஆறு வருடங்கள் அதிகரிக்கின்றது. அதே நேரம் பெண்களின் ஆயுட்காலம் இரண்டு வருடங்களாக அதிகரிக்கப்படுகின்றது என்று ஆராட்சியாளர்கள் மோற்றன் ஏகிளைனும், ஜேம்ஸ் ஈ என்ஸ்றோயும் கூறியுள்ளனர்.

### செழியன்

'தினமும் 3,200- 12,000 மில்லி கிராம் உயிச்சத்து சி யை எடுத்துவந்தால், நாங்கள் 12-18 வருடங்கள் மேலதிகமாக உயிர் வாழ முடியும்' என்று Linus Pauling, Ph.D கூறியுள்ளார். மேலும் இந்த உயிர்ச்சத்தைப் பற்றி, இரண்டு தடவைகள் நோபல் பரிசு பெற்ற இந்த Linus Pauling, Ph.D கூறுகையில் 'உயிர்ச்சத்து சி, மனித உடலுக்கு ஏன் தேவை என்று இதுவரை கண்டறியப்பட்டதை விட, இன்னமும் கண்டறியப்படாத பல தொழிற்பாடுகளை இது நமது உடலில் கொண்டுள்ளது' என்றும் கூறுகின்றார்.

குழந்தை கருவுற்றிருக்கும் போதிருந்தே உயிர்ச்சத்து சி மிக முக்கியமானது என்பதை பலர் அறிந்திருப்பதில்லை. கருப்பையில் உள்ள சிசுவை பாதுகாப்பதற்கென்று, சிசுவைச் சுற்றி amniotic fluid என்கின்ற திரவம் உள்ளது. சிறிய விபத்துகளினால் சிசு பாதிக்கப்படாமல் இந்த திரவம் பாதுகாப்பை வழங்குகின்றது. சிசு வளர்வதற்கு உரிய வெப்பநிலை மற்றும், தகுந்த சூழலையும் இந்த amniotic fluid வழங்குகின்றது. அத்தோடு சிசு அசைவதற்கும், வளர்வதற்கும் உதவுகின்றது. கர்ப்பம் தரித்து பன்னிரெண்டு நாட்களில் இந்த amniotic fluid உருவாகின்றது.

தாய்மை அடைந்த பெண்கள் சிலருக்கு, பிரசவத்திற்கு உரிய காலத்துக்கு முன்பாக amniotic fluid உடைந்து வெளியேறி விடுகின்றது (Waters break). இதன் பிறகும் தொடர்ச்சியாக குழந்தை பல மணிநேரம் கர்ப்பப்பையிலேயே இருந்தால், அது குழந்தைக்கு ஆபத்து ஏற்படலாம். இவ்வாறு amniotic fluid உடைந்து வெளியேறினால் உடன் மருத்துவ மனைக்குச் செல்ல வேண்டும். அல்லது அவசர மருத்துவ சிகிச்சைக்கான உதவியை தொலைபேசி மூலம் அழைக்க வேண்டும். சில தருணங்களில் இந்த amniotic fluid உடைந்து வெளியேறுவதை பெண்கள் உணர்ந்து கொள்வதில்லை. குறிப்பாக குளித்துக் கொண்டிருக்கும் போது இச்சம்வம் நிகழலாம். அந்நிலையில் இதனை உணர்ந்து கொள்வது கடினம்.



சிசுவையும் amniotic fluid ஐயும் சுற்றி கவசமாக மெல்லிய இழையம் உள்ளது. இது amniotic Sac என்று அழைக்கப்படுகின்றது. amniotic Sac உடைவதனினாலேயே amniotic fluid வெளியேறுகின்றது. உயிர்ச்சத்து சி, amniotic Sac ஐ உரிய காலத்துக்கு முன் உடையாமல் தடுக்கின்றது என்று கண்டறியப்பட்டுள்ளது. amniotic Sac இன் உருவாக்கத்திற்கும், உறுதிக்கும் உயிர்ச்சத்து சி முக்கிய பங்கு வகிக்கின்றது. உயிர்ச்சத்து சி குறைவான தாய்மார்களின் amniotic Sac, முதிர்ச்சியற்றதாக வும், பலவீனமானதாயும் இருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

உயிர்ச்சத்து சி யின் மற்றோர் பங்கு, நமக்கு 'ஸ்கேவி' நோய் வராமல் தடுப்பதாகும். நமது உடலில் collagen உருவாதல் நிறுத்தப்படுகின்ற போது 'ஸ்கேவி' நோய் ஏற்படுகின்றது. இந்நோய் குணப்படுத்தப்படாது போயின் மரணம் நிச்சயம். 'ஸ்கேவி' நோய் ஏற்பட்டவர்களுக்கு மூட்டுகளில் நோ ஏற்படும், தோலில் கறுப்பு, நீல நிற அடையாளங்கள் ஏற்படும். இந்நோயின் ஆரம்ப அறிகுறியாக, இவர்களின் கால், பின்புறம், கைகளில் சிவப்பு நிறப் புள்ளிகள் தோன்றும்.

collagen என்பது ஒரு வகை புரதம். மனித உடலில் உள்ள ஆயிரக் கணக்கான புரத வகைளில் இதுவும் ஒன்று. நமது உடலில் உள்ள புரதத்தில் நான்கில் ஒரு பங்கு collagen ஆகும். பற்கள், எலும்புகள் எல்லாமே இந்த collagen உடன் கனியுப்புகள் சேர்க்கப்பட்டு உருவானவையே. பத்தொன்பது வகையான collagen மனித உடலில் உள்ளது என்று அறியப்பட்டுள்ளது. உயிர்சத்து சி இல்லாமல் உடலில் இந்த collagen உற்பத்தி நடைபெறமுடியாது. collagen உற்பத்தி செய்யப்படும் போது சங்கிலித் தொடர்ச்சியான பல தொழிற்பாடுகள் நிகழ்கின்றன. சில தொழிற்பாடுகள் கலங்களுக்கு உள்ளேயும், தொடர்ந்து சில தொழிற்பாடுகள் கலங்களுக்கு வெளியேயும் நிகழுகின்றன. உயிர்ச்சத்து சி கலங்களுக்கு உள்ளே நடக்கின்ற தொழிற்பாட்டில் பிரதான பாத்திரம் வகிக்கின்றது.

கலங்களுக்கு உள்ளே நடைபெறும் தொழிற்பாட்டில் முக்கியமானது, Proline, Lysine என்ற இரண்டு வகை அமினோ அமிலங்களுடன், OH ஐ சேர்க்கும் வேலையாகும் (Hydroxylates). இந்த வேலை நடைபெற்றால் மட்டுமே பின்னர் சங்கிலித் தொடர்பான மற்றைய தொடர்ச்சியான வேலைகள் நடைபெறும். இந்த OH சேர்க்கும் வேலை உயிர்ச்சத்து சி இருந்தால் மட்டுமே நடைபெறும். 'ஸ்கேவி' நோய் உள்ளவர்களுக்கு இந்த வேலை நடைபெறாமல் நிறுத்தப்பட்டிருக்கும். அதன் காரணமாக collagen உற்பத்தி நடைபெறமாட்டாது.

collagen உடலின் எல்லாப் பாகங்களிலும் உள்ளது. பற்கள், எலும்புகள், ஈரல், சதையம், சிறுநீரகம், குருதிக் குழாய், லெகமன் (ligamen ts), என பல முக்கிய இடங்களில் எல்லாம் உள்ளது. சம அளவான உலோகத்துடன் ஒப்பி டும் போது collagen இன் மிக உறுதியானது.

உடலில் collagen உற்பத்தி செய்யப்படுவது நிறுத்தப்பட்டால் பல தீங்கான விளைவுகள் ஏற்படும். முரசு கரைதல், தோலில் வெடிப்பு ஏற்படுதல் என்பனவற்றோடு இது நிற்காமல், குருதிக் குழாயும் வெடிக்கும். இவை எல்லாம் சில உதாரணங்கள் மட்டுமே. மறுபடி collagen உற்பத்தி நடைபெறமுடியாது போனால் மரணம் நடைபெறுவது நிச்சயம். ஆனால் போதுமான உயிர்ச்சத்து சி யை மீண்டும் உள்ளெடுப்பதன் மூலம் 'ஸ்கேவி' நோயை சில தினங்களில் குணப்படுத்தலாம்.

உயிர்ச்சத்து சி குறையும் போது உடலின் நோய் எதிர்ப்புச் சக்தி குறைகின்றது. அதே நேரம் அதிகளவு சி இருக்கின்ற போது, நோய் எதிர்க்கும் தன்மை உடைய வெண்குருதிக் கலங்களை குருதியில் அதிகளவில் உற்பத்தி செய்கின்றது. குறிப்பாக உயிர்ச்சத்து சி, IgA, IgG, IgM ஆகியவற்றின் உற்பத்தியை அதிகரிப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவை நோய்க் கிருமிகளுடன் சண்டை போடும் கலங்களாகும். இதனால் தான் சளி, ஜலதோசம் வராமல் இருக்க உயிர்சத்து சி யை பாவிக்கும் படி அறிவுறுத்தப்படுகின்றது.

தினமும் மது அருந்துபவர்களின் உடலில் உயிர்சத்து சி இருக்காது. புகைப் பிடிப்பவர்களும் குருதியில் உள்ள உயிர்சத்து சி யை இழக்கின்றனர். உயிர்சத்து சி குறைபாடு உடையவர்களுக்கு முரசு கரைதல், முரசில் இருந்து குருதி வடிதல், பற்கள் இழப்பு, மூட்டுகளில் நோ என்று பல பிரச்சினைகள் தோன்றும். இவர்கள் எல்லாம் மேலதிக

தொடர்ச்சி 22ம் பக்கம்


**Project Green:**
**ஆரோக்கியமுள்ள சுற்றுப்புறத்தையும் வலுவான பொருளாதாரத்தையும் நோக்கி**

PROJECT GREEN தனி கனடியர்கள், வியாபார நிறுவனங்கள், சமுதாயத்தினர் மற்றும் அரசுகள் ஒன்றாக இணைந்து ஆரோக்கியமுள்ள சுற்றுப்புறத்தையும் வலுவான பொருளாதாரத்தையும் உருவாக்கச் செயல்படும் ஒரு தேசிய முயற்சியாகும். மேலும் *Moving forward on climate change* இத்திட்டத்தின் ஒரு பகுதியாகும்.




**தெளிவான நோக்கங்களுடன் PROJECT GREEN மற்றும் தட்பவெப்பநிலை மாற்றுத்திட்டம்,**
✓ நமது காற்று மண்டலத்தைச் சுத்தமாக வைக்கவும் புகைப்பெருக்கத்தைக் குறைக்கவும் செய்யும்.
✓ நமது ஆறுகள், குளங்கள் மற்றும் சமுத்திரங்களைச் சுத்தமாக வைக்கச் செய்யும்.
✓ நமது பசுமை இடங்களையும், வனவிலங்குகளையும் பாதுகாக்கும்.
✓ புதிய சுற்றுப்புறப் பாதுகாப்பிற்கான தாக்குப்பிடிக்கும் தொழில் நுணுக்கங்களை உருவாக்குவதில் கனடாவை ஒரு உலக ரீதியில் தலைமையாக்கும்.
✓ நமது கியோடோ உறுதிமொழியை நிறைவேற்ற உதவும்.

**இத்திட்டத்திற்கான உங்கள் பிரதியைப் பெறவோ அல்லது One-Tonne Challenge சோதனையில் பங்கு கொள்ளவோ:**

**1 800 O-Canada (1 800 622-6232),** TTY 1 800 465-7735, என்ற எண்ணிற்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளுங்கள் அல்லது **climatechange.gc.ca** என்ற இணைய தளத்திற்குச் செல்லுங்கள்.

Government of Canada Gouvernement du Canada

Canada

# கங்குலியின் இடைநிறுத்தம் முடிவின் ஆரம்பமா?

**இந்திய அணித்தலைவர் கங்குலி....!**
End? அல்லது Restart?!!




சௌரவ் கங்குலியை அணியில் சேர்ப்பதா நீக்குவதா என்ற விடயத்தில் இந்திய கிரிக்கெட் அணித் தேர்வாளர்கள் பெரும் திண்டாட்டத்தில் உள்ளனர்.

சமீப காலமாக கங்குலியின் துடுப்பாட்டம் மிகவும் மோசம் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. இதனால் அவர் கிரிக்கெட் வாழ்க்கையின் இறுதிக் கட்டத்துக்கே சென்றுவிட்டாரோ என்ற அச்சம் தெரிகிறது. அவரது வாழ்வின் அனைத்து அம்சங்களையும் ஒருமுறை உற்று நோக்குவோம். 270 போட்டிகளில் பங்கேற்று 22 சதங்கள் உள்பட 9,945 ஓட்டங்களை ஒரு தினப் (ODI) போட்டிகளிலும், 82 போட்டிகளில் பங்கேற்று 4,949 ஓட்டங்களை (சராசரி 41) (Test) போட்டிகளிலும் சேர்த்துள்ளார் கங்குலி.

ஆனால் சமீபத்தில் நடைபெற்ற பாகிஸ்தானுக்கு எதிரான மூன்று போட்டிகள் கொண்ட ரெஸ்ட் தொடரில் ஆறு இன்னிங்ஸிலிலும் மொத்தமாக 48 ஓட்டங்களும் ஒரு தினப் போட்டிகளில் 0, 9, 4, 18 எனவும் ஓட்டங்களை அவர் சேர்த்துள்ளார். அதன் பிறகு ஆறு ஆட்டங்களில் விளையாடத் தடையைப் பெற்றார்.

ஆதலால் அவரது வழக்கமான ஆட்டத்தை பாகிஸ்தானுக்கு எதிரான தொடரில் காணமுடியவில்லை. ரெஸ்ட் தொடரை சமன் செய்த இந்தியா, ஒரு தினத் தொடரை இழந்தது. இதன் மூலம் அவரது திறமை மங்கியுள்ளது தெரியவருகிறது.

இது மாதிரியான பிரச்சினைகள் ஒவ்வொரு வீரருக்கும் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் ஏற்படுவது வழக்கம். ஆனால் இந்தியாவைப் பொறுத்தவரை கடந்த ஐந்து ஆண்டுகளில் கங்குலியின் பணி மகத்தானது. ஆதலால் அவரது கிரிக்கெட் வாழ்க்கை குறித்து முடிவு எடுப்பதற்கு முன்பு தீவிரமாக கிரிக்கெட் சபை ஆலோசிக்க வேண்டும். இந்தியாவுக்குக் கிடைத்துள்ள மிகச் சிறந்த வீரர்களில் கங்குலியும் ஒருவர்!

## தென் ஆபிரிக்கா (South Africa) மாபெரும் வெற்றி!

மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான மூன்றாவது கிரிக்கெட. ரெஸ்ட் போட்டியில் வெற்றி பெற்று தொடரையும் தென்ஆபிரிக்க அணி கைப்பற்றியது. நாலு ரெஸ்ட் கொண்ட இத்தொடரை 2-0 என்ற கணக்கில் தென் ஆபிரிக்கா வென்றுள்ளது. கடைசி ரெஸ்ட் ஆன்டிகுவாவில் April 29, 05 தொடங்கியுள்ளது.

முதல் இன்னிங்ஸில் மே.இ.தீவுகள் அணி 296 ஓட்டங்களை குவித்தது. தொடர்ந்து துடுப் பெடுத்தாடிய தென்ஆபிரிக்க அணி முதல் இன்னிங்ஸில் 9 விக்கெட் இழப்பில் 548 ஓட்டங்களை குவித்த நிலையில் ஆட்டத்தை டிக்ளேர் செய்தது.

இதன்மூலம் மே.இ. தீவுகள் அணியின் முதல் இன்னிங்ஸ் ஸ்கோரை விட 252 ஓட்டங்கள் முன்னிலை பெற்றிருந்தது. இதையடுத்து இரண்டாவது இன்னிங் ஸைத் தொடங்கிய மே.இ. தீவுகள் 54.2 ஓவரில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 166 ஓட்டங்களை மட்டுமே சேர்த்தது.

இதனால் இன்னிங்ஸ் மற்றும் 86 ஓட்டங்கள் வித்தியாசத்தில் மே.இ. தீவுகள் தோல்வியைத் தழுவியது.

தென்ஆபிரிக்க அணியின் வேகபந்து வீச்சாளர் ஆந்த்ரே நெல் 32 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டைச் சாய்த்து வெற்றிக்கு உதவினார். அவரது கிரிக்கெட் சரித்திரத்தில் இது ஒரு சாதனை. இத்துடன் இந்த ரெஸ்ரில் இவர் மொத்தம் 10 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். இதற்காக 88 ஓட்டங்கள் மட்டுமே விட்டுக் கொடுத்துள்ளார். இதோடு மே.இ. தீவுகளுக்கு எதிரான ஆட்டத்தில் தென்ஆபிரிக்கா தொடர்ந்து பெற்றுள்ள 4-வது வெற்றி இது.

தென்ஆபிரிக்க அணியில் கிரேம் ஸ்மித் (104). ஏ. வில்லியர்ஸ் (178) சதம் அடித்தனர். டிப்பெனர் 71 ஓட்டத்தில் ஆட்டமிழந்தார். ஜெ. காலிஸ் 78 ஓட்டங்கள் சேர்த்தார். நிக்கி போயி 20 ஓட்டங்களில் ஆட்டமிழக்காமல் இருந்தார். நெல்லும் 4 ஓட்டங்களில் ஆட்டமிழக்காமல் இருந்தார். மே.இ. தீவுகள் இரண்டாவது இன்னிங்ஸில் கெய்ல் 5. வேவல் ஹிண்ட்ஸ் 11. ராம்நரேஷ் சர்வான் 0, லாரா 13, சந்தர்பால் 31, பிரேவோ 6, ஹிண்ட்ஸ் 15, சி. பிரவுனி 68, போவல் 5, எட்வர்ட்ஸ் 2, ஆர். கிங் (ஆட்டமிழக்காமல்) 3 ஓட்டங்கள் சேர்த்தனர். தெ. ஆபிரிக்க தரப்பில் நெல் 6, நிதினி 2 போயி, காலிஸ் தலா 1 விக்கெட் முறித்தனர்.

## உதைபந்தாட்டம்

சர்வதேச கால்பந்து சங்கங்களின் சம்மேளனம் (FIFA) வெளியிட்ட உலக கால்பந்து அணிகள் தரப்பட்டியலில் உலக சாம்பியன் பிரேசில் முதலிடத்தைச் தக்க வைத்துக்கொண்டுள்ளது. செக். குடியரசு அணி இரண்டாவது இடத்துக்கு முன்னேறியுள்ளது. ஆர்ஜெண்டீனா மூன்றாவது இடத்தில் அப்படியே உள்ளது. பிரான்ஸ் தடுமாற்றம் கண்டு 4-வது இடத்துக்கு சரிந்துள்ளது. நெர்லாந்து 5-வது இடத்துக்கும் இங்கிலாந்து 6-வது இடத்துக்கும் முன்னேற்றம் கண்டுள்ளன. ஸ்பெயின் 7-வது இடத்திலும் மெக்ஸிகோ 8-வது இடத்திலும் உள்ளன.

2006 ஆம் ஆண்டு உலக கிண்ண போட்டிகளை நடத்த இருக்கும் ஜேர்மனி 20-வது இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளது. 9-வது இடத்தில் போர்த்துக்கல்லும் 10-வது இடத்தில் இத்தாலியும் உள்ளன. அண்மையில் நடைபெற்ற போட்டிகளில் அணிகள் பெற்ற வெற்றி தோல்விகளின் அடிப்படையில் தர வரிசை நிர்ணயிக்கப்படுகிறது.

## உலககிண்ணம் - 2007

உலகப் கோப்பை கிரிக்கெட் போட்டிக்கான அட்டவணை யூலை 19 ஆம் திகதி அறிவிக்கப்படும். நாலு ஆண்டுகளுக்கு ஒரு முறை உலகக் கோப்பை கிரிக்கெட் நடக்கிறது. கடந்த முறை 2003 இல் தென் ஆபிரிக்காவில் இப்போட்டி நடந்தது. அப்போது அவுஸ்திரேலிய அணி பட்டம் வென்றது.

அடுத்த போட்டி மேற்கிந்தியத் தீவுகளில் 2007 இல் நடக்கும். 16 நாடுகள் இப்போட்டியில் பங்கேற்கும். ஒரு நாள் போட்டிகளில் விளையாட அங்கீகாரம் பெற்ற 11 நாடுகள் நேரடியாக விளையாடும். மீதியுள்ள 5 நாடுகள் ஐ.சி.சி டிராபி போட்டியின் முடிவில் முடிவு செய்யப்படும். இப்போட்டி அயர்லாந்தில் யூலையில் நடைபெறவுள்ளது.

**எஸ். கணேஷ்**

போட்டியில் பங்கேற்கும் 16 நாடுகள் 4 பிரிவாக பிரிக்கப்படும். ஏ. பிரிவில் உலக சாம்பியன் அவுஸ்திரேலியா, தென் ஆபிரிக்கா மற்றும் ஐ.சி.சி டிராபி போட்டியில் இருந்து 2 நாடுகள் இடம்பெறும்.

பி பிரிவில் இந்தியா, இலங்கை, வங்கதேசம், ஐ.சி.சி டிராபியில் இருந்து ஒரு நாடு பங்கேற்கும்.

சி. பிரிவில் நியூஸிலாந்து, இங்கிலாந்து. ஐ.சி.சி டிராபி போட்டியில் இருந்து ஒரு நாடு, கென்யா கலந்து கொள்ளும்.

டி. பிரிவில் பாகிஸ்தான், கென்யா. ஐ.சி.சி போட்டியில் இருந்து ஒரு நாடு. சிம்பாவே கலந்துகொள்ளும்.

உலகக் கோப்பை போட்டி தொடர்பான ஐ.சி.சி யின் 3 நாள் கூட்டம் இலண்டனில் நடந்தது. இக்கூட்டத்தின் முடிவில் உலகக் கோப்பை போட்டி அட்டவணையை யூலை 19இல் வெளியிட தீர்மானித்தனர்.



உலக கோப்பையில் பங்கேற்கவுள்ள மீதி 5 நாடுகள் எவை என்பது யூலை 13ஆம் திகதி முடிவாகி விடும்.


ELECTRICAL WORKS



FRIDGE, WASHER, DRYER போன்ற மின் உபகரண திருத்த வேலைகள் செய்து கொடுக்கப்படும். நியாயமான கட்டணம். தரமான சேவை. வாடிக்கையாளர்களின் நன்மதிப்பீடு.

தொடர்புகளிற்கு: 416-286-2880

MORTGAGE CENTRAL
For All kinds of Mortgage

தனிநபர், வாசஸ்தலம், அலுவலகம், வியாபாரம் முதலியவற்றிற்கு அடமான வசதிகள் ஒழுங்கு செய்யப்படும். அடமானம் அல்லது கடன் வசதிகள் ஒழுங்கு முற்றாகும்வரை முற்பணம் செலுத்தத் தேவையில்லை.

No up front fee
1st & 2nd & 3rd Mortgage
Up to 100% Financing

Call: Sam Chaba
Cell: 416-318-5626
Res.: 905.201.0767

No Advance Taken Until Mortgage /Loan Approved
Lots of private Funds Available
• Business Loans / line of Credit • Personal Loan / Line of Credit

வீட்டில் பூச்சி, எலித் தொல்லையா?

வீடுகள், தொடர்மாடி வீடுகள், தொழிற்சாலைகள், வியாபார நிலையங்கள் போன்றவற்றில் பூச்சி, எலித் தொல்லையா? கவலையை விடுங்கள். முற்றாக ஒழிக்க அழையுங்கள்

Kanthan: 416.291.3997







• No Spraying • No Smelling • No Moving



தமிழன் வழிகாட்டி வழங்கும்
செந்தியின் வர்த்தகச் சோலை 2005
South Asian Trade Show

"Largest Sri Lankan Trade Show of North America"

MAY 14 & 15, 2005
Saturday & Sunday 11am to 10pm
Parc Downsview Park
'Bay 1 Hall'
(Sheppard & Keele)
For Info Call Athavan Publications at 416.615.4646

# C.M.H.C இன் அடமானக் காப்புறுதி பிரீமியம் (Premium) குறைகின்றது

ஏப்ரல் 22, 2005 ஆம் ஆண்டிலிருந்து 25% இற்கு குறைவாக முதலீடு செய்து வீடு வாங்கும்போது செலுத்தப்படும் அடமானக் காப்புறுதிக்குரிய Premium குறைக்கப்படுவதாக CMHC தெரிவித்துள்ளது. இது குறிப்பாக 10% குறைவாக முதலீடு செய்து ஆதனம் வாங்கும் போதே இதன் நன்மை கிடைக்கும். முன்பு 3.25% ஆக இருந்த காப்புறுதிக்குரிய Premium இப்பொழுது 2.75% ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. இதனால் 5% உடன் ஆதனம் வாங்குபவர்கள் நன்மை அடைவார்கள். அத்துடன் இதற்காக செலுத்தப்படும் Provincial Sales Tax (PST) இன் பெறுமதியும் குறைவடையும். Rental Housing Project களிற்குரிய Premium முற்றாக நீக்கப்படுவதாகவும் Labor & Housing மந்திரி, Joe Fontana தெரிவித்துள்ளார்.




2005ஆம் ஆண்டின் இலையுதிர் காலத்திலிருந்து வாங்கப்படும் ஆதனத்திற்குரிய ரைற்றிலும் (Title / Deed) உம் CMHC Insurance இனால் பாதுகாக்கப்படும் எனவும் தெரியவருகின்றது. இதனால் வீடு வாங்குபவர்களிற்கு ஆரம்ப செலவு குறையும். கடந்த இரு வருடங்களில் அண்ணளவாக 30% இனால் Premium குறைக்கப்பட்டுள்ளது. எனவே 5% உடன் வீடு வாங்குபவர் களிற்கு இது ஓர் உந்து சக்தி கொடுக்கலாம் என CMHC தெரிவிக்கின்றது. CMHC இன் இந்த முடிவினால், ஆதனங் களிற்கு, காப்புறுதி செய்யும் மற்றைய நிறுவனமாகிய GE உம் தனது காப்புறுதியின் பெறுமதி யையும் குறைக்க வேண்டிய நிலமைக்கு தள்ளப்பட்டுள்ளது. எனவே GE உம் தனது காப்புறுதியை குறைக்கும் என எதிர்பார்க்கலாம். வீடு வாங்கு பவர்களை ஊக்குவிப்பதற் காகவே இந்த முடிவு எடுத்ததாக கூறுகின்றபோதும், CMHC இன் எதிர்பாராத அதிகளவு வருமானம் காரணமாகவும் கொள்ளவும். மேலும் எதிர்காலத்தில் வீட்டின் விலையில் ஏற்படும் தாக்கத்தை குறைப்பதற்காக எடுக்கப்பட்ட முன் ஏற்பாடாகவும் கொள்ளலாமா?

# நாமும் நமது இல்லமும்

## ராஜா மகேந்திரன்

## ரொறொன்ரோவில் வீட்டின் விலை 65% ஆல் அதிகரித்துள்ளது

ரொறொன்ரோவில் வீட்டின் விலை மிக அதிகமாக அதிகரித்து விட்டதாக ஊடகங்கள் தெரிவிக்கின்றன. ஆனால் கனடாவின் முக்கிய நகரங்களில் வீட்டின் விலையை அவதானிக்கும் போது ரொறொன்ரோ நகரம் 10-வது இடத்தில் காணப்படுகின்றது. உதாரணமாக கூறினால், மொன்றியல் நகரத்தில் வீட்டின் சராசரி விலை 1995ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 86% வீதத்தினால் அதிகரித்துள்ளது. தலைநகரம் ஒட்டாவாவில் 70% இனாலும் அதிகரித்துள்ளது. ரொறொன்ரோவின் இன்றைய சராசரி $330,000 (அண்ணளவாக) காணப்படுகின்றது.

1997ஆம் ஆண்டின் சராசரி வீட்டு விலை 198,000 (அண்ணளவாக) காணப்பட்டது. இதனை கணிக்கும் போது ரொறொன்ரோவில் வீட்டின் சராசரி விலை 65% (அண்ணளவாக) அதிகரித்துள்ளது. ஆனால் கடந்த பத்து வருடங்களில் வீட்டின் விலை 60% இனால் அதிகரித்துள்ளது.

எமது நினைவிற்கு எட்டிய காலத்தில், இந்த கால கட்டத்திலேயே நீண்ட காலத்திற்கு வீட்டின் விலை மிக அதிகமாக அதிகரித்துள்ளது என்பது தெரிகின்றது. பொதுவாக வீட்டின் விலை அதிகரிப்பும், அதற்கு அப்புறம் குறைவதும் இயல்பு. சில பகுதிகளில் வீட்டின் விலை மிக அதிகமாகவும் (உதாரணமாக ரொறொன்ரோவின் மத்தியபகுதி கடற்கரைப் பகுதி (Beach Area) அதிகரித்திருப்பதை காணலாம். கடந்த பத்து வருடங்களில் வீட்டின் விலை அதிகரிப்பின் இறங்கு வரிசையில் உள்ள நகரங்கள் முறையே மொன்றியல், கல்கரி, Halifax, Saskatoon, Kelona, Edmonton, ஒட்டாவா, விக்ரோறியா, Pricne Edward Island மற்றும் ரொறொன்ரோ.



எனவே மற்றைய நகரங்களுடன் ஒப்பிடும்போது ரொறொன்ரோவில் வீட்டின் அதிகரிப்பு குறைவாகக் காணப்படுகின்றது.




# இரசிகர் மன்றமா? அரசியல் கட்சி அமைப்பா?

உலகெங்கும் சினிமா நடிக நடிகைகள், அவர்கள் வாழ்வு, சம்பாத்தியம் எல்லாம் கவர்ச்சிகரமாக்கப் பட்டவைதான். ஆனால் அது அக்கவர்ச்சியோடு, செல்வச்செழிப்போடு வரையறுக்கப்பட்டதாக இருக் கும். மார்லின் மன்றோவுக்கோ, தேவ் ஆனந்த் துக்கோ இரசிகர் மன்றங்கள் இருப்பதாகவோ, அவற்றைத் தம் கட்டளைக்கு ஆட்படுத்தி அவற்றை நிர்வகிக்க பணமும் கொடுத்து வளர்ப்பதாகவோ அல்லது அவற்றைத் தம் அரசியல் காரணங்க ளுக்கு பயன்படுத்து வதாகவோ நாம் கேட்டதில்லை.

நான் வேண்டுமென்றே, தம் நடிப்புத் திறனுக்காக, தம் கலை வாழ்வுக்காக அன்றி, வெறும் கவர்ச்சிக்காகவே பெயர் பெற்றவர்களையே எடுத்துக் கொண்டேன். 1950-களில் எந்த தமிழ் நடிகருக்கும் இரசிகர் மன்றங்கள் இருந்ததாகக் கேட்டதில்லை. டி.ஆர். ராஜகுமாரி அக்கால கவர்ச்சிக் கன்னி. எம்.கே.தியாகராஜ பாகவதர் போகும் இடங்களில் எல்லாம் பெண்கள் அவர் அழகில், பாட்டில் மயங்கி ஏக்கப் பெருமூச்சு விட்டுக்கொண்டிருப்பதாக சொல்வார்கள். அவர் அக்கால சூப்பர் ஸ்டார். ஆனால் இரசிகர் மன்றங்கள் இருந்ததில்லை. இரசிகர் மன்றங்கள் என்பதே திராவிட இயக்கத்தின் கொடை தான். அதன் படிப்பகங்கள் போல.

நான் முதன் முதலாக இரசிகர் மன்றங்கள் பற்றிக் கேள்விப்பட்டது, எம்.ஜி.ஆர் ஒரு வெற்றி பெற்ற நட்சத்திர நடிகரான பிறகு, அவரை தி.மு.க மக்கள் திலகம் என்றும் புரட்சி நடிகர் என்றும் திட்டமிட்டு பிரசாரம் செய்யத் தொடங்கிய பிறகு தான் அது நிகழ்ந்தது, எம்.ஜி.ஆர் தி.மு.க கட்சியோடும் அண்ணாதுரையோடும் தன்னை ஐக்கியப்படுத்திக் கொண்ட பிறகு அவருக்கு இரசிகர் மன்றங்கள் தோன்ற ஆரம்பித்தன, தி.மு.க நாடெங்கும் கிளை பரப்பியிருந்த படிப்பகங்களின் அடியொற்றித்தான்.

நான் சிறுவனாக இருந்த பள்ளி நாட்களில், எந்த ஊரிலும் எந்த தெருவிலும் ஓர் இலவச படிப்பகம் இருக்கும். அது திராவிட கழகம் நடத்தும், அதன் பத்திரிகைகள் குவிந்து கிடக்கும் ஓர் அறையாக இருக்கும். வேறு எந்த அரசியல் கட்சியும் தன்னை இவ்வாறு வேரூன்றிக்கொள்வதில் அக்கறை காட்டவில்லை. எந்த கட்சித் தலைமையும் திட்டமிட்டுத் தம்மை எழுத்தாளர்களாக, கலைஞர்க ளாக, சிந்தனாவாதிகளாக, ஸ்தாபித்துக்கொண்டு, விளம்பரப்படுத்திக் கொள்வதில் ஆர்வம் காட்டவில்லை. வேறு எந்த கட்சியும் தன் விளம்பர சாதனமாக நாடகத்தையும், சினிமாவையும் இவ்வளவு ஆக்கிரமித்துக் கொண்டதில்லை. திராவிட கழக தலைவர், அண்ணாதுரை தன் முதல் முயற்சியான, 'ஓர் இரவு' படத்தின் வெற்றிக்குப் பிறகு சொன்னதாக ஒரு புகழ் பெற்ற வாக்கியம் உண்டு: "இது போன்று ஒரு பத்து திரைப்படங்கள், தணிக்கை இன்றி வெளியிட முடியுமானால், நாம் திராவிட நாடு அடைந்து விடமுடியும்'.


Marmayogi (1951)

நான் இது பற்றியெல்லாம் கேள்விப்பட்டதென்று தான் பேசமுடியும். மன்றங்களின் தோற்றத்திற் கான காரணங்களை, அதற்கு மூலவர்களாக இருந்த மனிதர்களை, 60-65 வருடகாலம் சென்று விட்டபிறகு இன்று அறுதியிட்டுச் சொல்வது கடினம். எம்.ஜி.ஆருக்கு உறுதுணையாக இருந்த அவரது திரைப்படக்காரியங்களுக்கு நிறுவன பொறுப்பாள ராக இருந்த ஆர்.எம்.வீரப்பன் ஓர் இடத்தில் மன்றங்கள் ஸ்தாபித்தது தன் idea என்று எழுதியதைப் படித்துள்ள ஞாபகம் எனக்கு இருக்கிறது. அவர் எம்.ஜி.ஆரின் நம்பிக்கைக்கு பாத்திரமானவராகவும் இருந்தார். திராவிட இயக்க அனுதாபியும் கூட. எம்.ஜி.ஆரின் நட்சத்திர ஸ்தானத்தையும், திராவிட இயக்க நடை முறைகளையும், கவனித்து வந்த அவருக்கு இப்படி ஓர் எண்ணம் தோன்றியிருக்கக் கூடும். எனினும் எம்.ஜி.ஆர் என்ற நட்சத்திரத்தின் இரசிகர்களையும், திராவிட இயக்க அனுதாபத்தையும் ஒன்றிணைத்து அதற்கு நிரந்தரமும், தொடர்ந்த இயக்கமும் கூடிய ஓர் அமைப்பு வடிவம் கொடுக்க நினைத்தது ஒரு பெரிய காரியம்தான். இன்று இரசிகர் மன்றம் என்பது மிகப் பரவலாகி எல்லா பெரிய ஸ்டார்களுக்கும் அது மிகத் தேவையான ஒன்றாகி விட்ட பிறகு, அதன் வட்டத்தை மீறி அதற்கு ஒரு பலம் வந்து விட்ட பிறகு, அதற்கு சொந்தம் கொண்டாடுவோர் நிறைய காணப்படுவார்கள். அல்லது இது எப்பொழுது உள்ள ஒன்றென்று கூட சொல்லலாம். ஆனால் திரைப்பட வரலாறு எழுதுகிறவர்களோ அல்லது எந்த சமூகவியலா ளரோ இது பற்றிச் சிந்தித்தது கிடையாது.

## வெங்கட் சாமிநாதன்

ஆனால், இது என் நினைவில் முதன் முதலாக எம்.ஜி.ஆருக்கென இரசிகர் மன்றங்கள் தோன்றிய பிறகு, அவருக்கு இணையாக திரைப்பட உலகில் வளர்ந்த மற்றத் திரைப்பட நட்சத்திரங்களுக்கும் இரசிகர் மன்றங்கள் தோன்றியது ஆச்சரியமளிக்க வில்லை ஆனால், சற்று யோசித்தோமானால், இது இரசனை சார்ந்த ஒன்றே அல்ல. இது தனக்குப் பிடித்த சினிமா நடிகரை, முதலில் நடிப்புசார்ந்து தொடங்கி பின் நடிப்பை மீறி அல்லது நடிப்பை உதறியும் கூட மற்ற காரணக்களுக்காக, அந்த நடிகரை ஒரு தேவ புருசனாக்கி வழிபாட்டுக்கு உரியவனாக ஆக்கும் காரியமாகவே இரசிகர் மன்றங்களின் நடவடிக்கைகள் இருந்து வருகின்றன.

என் ஞாபகங்களை பின்னெடுத்துச் சென்றால், எனக்கு வரும் நினைவுகள், சிவாஜி, எம்.ஜி.ஆர் என்ற மோதலை எல்லா தளங்களுக்கு எடுத்துச் சென்றது தெரிகிறது. எம்.ஜி.ஆர் ஒரு சாதாரண துணை நடிகன் என்ற ஸ்தானத்திலிருந்து பல வருடங்கள் முயன்று கடைசியில் நட்சத்திர அந்தஸ்து பெற்றவர். தொடக்கத்திலிருந்தே அவருக்கு இருந்த அரசியல் அனுதாபங்கள், காங்கிரசிலிருந்து தொடங்கி பின் அண்ணாதுரை யோடான நட்பு காரணமாக திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வந்து சேர்ந்தது. அவர் புரட்சி நடிகரானார். மக்கள் திலகமானார். அவரது நடிப்பின் சிறப்பையோ, அந்த மனிதரின் குணத்தையோ கண்டு கொடுக்கப்பட்ட அங்கீகாரமல்ல இந்த விருதுகள். திமுக வோடு சார்ந்த எந்த நடிகருக்கும் உடனே கொடுக்கப்பட்டு கழகம் பிரசாரப்படுத்தும் பட்டங்கள் இவை. திமுக வோடு ஐக்கியமாகி விட்டால் எந்த சோப்ளாங்கிக்கும் ஓர் அலங்காரமான பட்டம் கிடைக்கும். எஸ். எஸ். ராஜேந்திரன் என்று ஒரு நடிகர். திமுக வைச் சேர்ந்தவர். அவர் இலட்சிய நடிகர். இந்த முறை மற்ற இடங்களையும் தொற்றலாயிற்று. திராவிட இயக்கத்தோடு சம்பந்தப்பட்டு, நாடக நடிகனாகவும் பின்னர் திரைப்பட நடிகனாயும் புகழ் பெற்ற, விழுப்புரம் கணேசன், சிவாஜி கணேசன் ஆகி (அண்ணாதுரை யின் சிவாஜி கண்ட ஹிந்து சாம்ராஜ்யம் நாடகத்தில், சிவாஜியாக நடித்ததும் பெற்ற பட்டம்) பின்னர், கருணாதியின் பராசக்தி படத்தில் கனல் கக்கும் நீண்ட பிரசங்கங்களை மூச்சு விடாது ஆற்றும் திறனுக்காக நட்சத்திர அந்தஸ்தும், நடிகர் திலகம் என்ற பட்டமும் பெற்ற பிறகு, தன் நடிப்புத் திறனின் பிரயாணத்திற்கு திமுக தடையாகவிருப்ப தாக எண்ணி அதை உதறி விட்ட பிறகு, சிவாஜிக்கும் எம்.ஜி.ஆருக்கும் இடையேயான மோதல் அவர்களோடு மட்டும் நிற்கவில்லை. அவரவரது இரசிகர் மன்றங்களையும் பீடித்தது.

இதன் பிறகு அதுவரை, தம் அபிமான நட்சத்திரங்களின், படம் வெளியாகும் அன்றே முதல் காட்சிக்கே இரசிகர் மன்ற உறுப்பினருக்கு அனைவருக்கும் டிக்கட் எந்த தடையும் இல்லாது பெறும் உரிமை, நட்சத்திரத்தின் பிறந்த நாள் கொண்டாடுவது, அவ்வப்போது, சென்னைக்குப் போக நேரிட்டால், தன் அபிமான நடிகரைச் சந்தித்து வருவது, அவருடன் போட்டோ எடுத்துக்கொள்வது போன்ற பொறுப்புகளுக்கும் மேலாக, எதிர் தரப்பிலிருக்கும் நடிகரின் பட வெளியீட்டின் போது கலாட்டா செய்வது, சினிமா விளம்பர சுவரொட்டிகளைக் கிழிப்பது அல்லது அதன் மீது சாணி எறிவது, எதிர்



தொடர்ச்சி18ம் பக்கம்


17 வருடங்களாக தமிழர் மத்தியில் நன்மதிப்பைப் பெற்ற

**யோகாஸ்**

**குறுக்கு எழுத்துப் போட்டி இல. 163**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | 3 | | | 4 |
| | | | | | | 5 | |
| | 6 | | | 7 | | | |
| 8 | | | | | | | |
| | | 9 | | | 10 | | |
| | | | | | | | |
| | 11 | | | | 12 | | |
| 13 | | | 14 | | | | 15 |

**இட - வல**

1. இணங்கு
5. ஏர் கொண்டு செய்யும் தொழில்
6. இரு சமபாகங்களில் ஒன்று (வல- இட)
7. ஒரு சுவை
8. அனுபவத்தில் அறிந்த
9. இறைச்சி (வல-இட)
10. பாம்பின் வசிப்பிடம்
11. எதற்கு(வல - இட)
13. நடத்தை
15. வீடு வேய ஊதவுவது (வல-இட)

**மேல் - கீழ்**

1. சரி பார்த்தல்
2. நீர் இறைக்க உதவும்
3. மரக்கிளை
4. ஒளவியம்
6. யானையை வழி நடத்துபவன்
9. உணவு (கீழ்-மேல்)
11. ஒரு எண்
12. ஒரு நிறுத்துக் குறி (கீழ் - மேல்)
13. ஆரம்ப எண் (கீழ்-மேல்)
14. வயல் (கீழ்-மேல்)
15. ஒலி (கீழ்-மேல்)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| பா | ல | சி | ங் | க | ம் | | கி |
| லா | | த் | | டு | த | | ளி |
| டை | ட் | தி | | கு | ரு | | நொ |
| க் | | ர | | | மா | | ச் |
| க | ட | ம் | ப | ன் | | நி | சி |
| ட் | | | ண் | க | | யா | |
| டி | | | | ச | | ய | |
| | ஒ | ட் | டி | யா | ண | ம் | |

சரியான விடைகளில் இருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு "யோகாஸ்" இல் பாவிக்கக் கூடிய $15, $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் May 28, 2005க்கு முன்னர் விளம்பரம் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

162இல் வெற்றி பெற்றோர்
1) Thevanesan, Donmills
2) Mrs. K. Nanthini, Toronto

- ஆட்டிறைச்சி வியாபாரத்தில் தமிழ் மக்களின் உள்ளங்களை வென்றவர்!
- அன்றாட சந்தையில் மரக்கறி, மீன் வகைகளை தினமும் தருவித்துக் கொடுப்பவர்கள்.
- வாடிக்கையாளர்களின் தொகையில் உயர்ந்தவர்!

**(416) 267-0408** 731 - 733 Kennedy Road [Ken-Mark Plaza]



SAFETY TRUCKS

**Training School Ltd.**

Training & Trucking Classes A, D & Z




In Classes
- 365 (Learning Permit)
- Log Books
- Air Brake (Z)
- Dangerous Goods
- Border Crossing
- Defensive Driving Course

- தமிழ் மொழி மூலம் அனைத்துப் பயிற்சிகளும் தனித்தனியாகக் கொடுக்கப்படும்.
- One On One Training
- அனுமதிப்பத்திரத்திற்கு (License) உத்தரவாதம் அளிக்கப்படும். வேலை எடுப்பதற்கும் உதவிகளும் ஆலோசனைகளும் வழங்கப்படும்.
- கனடாவில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தமிழ் TRUCK DRIVING பயிற்சி இடம். (11 ஆம் ஆண்டு)
- We Accept Welfare & Unemployment Insurance
- வாரத்தில் ஏழு நாட்களும் பயிற்சிகள் வழங்கப்படும்.

18 Years Canadian
Experience with Trucks

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்:

YOGAN SOCKALINGAM

Truck Driving போதனாசிரியர்

905-793-9546 / 416-616-5979

250 Summerlea Road, Brampton, ON

# அறுவை - நிறைவு

அன்புள்ள விளம்பரப் பத்திரிகை வாசகர்களே!

வணக்கம்.

'அறுவை' என்ற தொடரில் யான் எழுதிவந்த தொலைபேசி உரையாடல்களைக் கடந்த இதழில் வெளிவந்த 'வள்ளிதிருமண விளக்கம்' என்ற 40ஆவது கட்டுரையுடன் நிறைவு செய்துவிட்டேன். 'என்ன! இப்படிச் சொல்லாமற் கொள்ளாமல் முடித்துவிட்டீர்களே!' என்று யாருமே கவலைப்பட மாட்டீர்கள் என்பதுவும் எனக்குத் தெரியும்.

தொலைபேசி எல்லோருக்குமே வாய்ப்பான ஓர் ஊடகம். அதனைக் கண்டுபிடித்தவர் கனடியர். Bell அவர்களின் சாதனை மகத்தானது. அந்த விஞ்ஞானிக்கு உலகம் மிகவே கடமைப் பட்டுள்ளது. அவர் வாழ்ந்த நாட்டிலே நாமும் வாழக் கிடைத்தது எதிர்பாராத ஒரு வாய்ப்புத்தான்.

ஒவ்வொரு சனிக்கிழமையும் சமய வகுப்பு நடத்துகிறேன். ஒவ்வொரு வியாழக்கிழமையும் கீதவாணி வானொலியிற் கவியரங்கம் ஒன்று நடத்துகிறேன். இடைக்கிடை திங்கட் கிழமைகளில் சர்வதேச வானொலியில் கவிச் சாரலிலும் பங்குபற்றி வருகின்றேன். இவை யாவற்றையும் எனது வீட்டில் இருந்தவாறு தொலைபேசி மூலமாகவே செய்து வருகின்றேன்.

இவற்றைவிட நாளாந்தம் ஐயங்களைத் தீர்த்துக்கொள்வதற்கென்றே வரும் அழைப்புகள் அதிகம். அவற்றுட் பலவற்றையே பலருக்கும் பயன்படும்பொருட்டு கட்டுரைகளாக 'விளம்பரம்' பத்திரிகையில் எழுதிவந்திருக்கிறேன். சில கட்டுரைகள் கற்பனையானவை என்பதையும் தெரிவிக்க விரும்புகின்றேன்.

அவற்றைத் தொடர்ந்து வெளியிட்டுவந்த விளம்பரம் ஆசிரியருக்கும் வாசித்துத் தமது கருத்துக்களையும் பாராட்டுக்களையுந் தெரிவித்த வாசகர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒரு சிலருக்கு அறுவை என்ற சொல் அறவே பிடிக்கவில்லை. எனக்குஞ் சொல்லியிருக்கிறார்கள், பத்திரிகை ஆசிரியருக்குந் தெரிவித்திருக்கிறார்கள்.



கட்டுரைத் தொடரிற் பல இடங்களிலே இருபொருள் தரும் வகையில் சொற்களை யான் பயன்படுத்தியிருப்பதை நுண்மதியாளர் கவனித்தருத்தல்கூடும். அவ்வகையான ஒரு சொல்லே அறுவை என்பதும்.

ஒருவரின் எழுத்தில் அல்லது பேச்சில் சலிப்புத் தட்டுவதற்கு (bore அடிப்பதற்கு) என்ன காரணமோ அதனைக் குறிப்பதற்கு அறுவை என்ற சொல் வழங்கப்பட்டு வருகின்றது. ஆனால் அறுவை என்பது சித்திரை மாதத்துக்குரிய தமிழ்ச் சொல் என்பது பலருக்குத் தெரியாது. ஆடை என்ற மற்றொரு பொருளும் அதற்கு உள்ளது. பொன்னாடை என்பதற்கு அறிவாடை என்ற பொருளுமுண்டு. உரையாடல் மூலம் யான் இந்த ஆடையை வழங்கியதாகவும் கொள்ளலாம். எல்லாவற்றுக்கும் மேலாக, நெற்கதிரை (அரிவி) வெட்டுதலையும் அறுவை குறிக்கும்.

இவற்றுள் முதலாவது பொருளிலேயே சிலர் குத்திட்டு நின்றுவிட்டார்கள். இந்த இடத்திலே ஒருவரிடத்திலேயுள்ள நல்ல குணத்தையா (அல்லது) கெட்ட குணத்தையா நாம் பொருட்படுத்த வேண்டும் என்ற கேள்வியும் எழுகிறது. எப்படியோ அறுவையில் ஆர்வங்கொண்ட அனைவருக்கும் மீண்டும் நன்றி. அறுவையைப் போலவே கட்டுரையின் முடிவில் இடம்பெற்ற கோவலன் கூத்துப் பாடலும் பலபொருள் நோக்கிற் பயன்படுத்தப்பட்டது. எனினும் அதுபற்றி யாரும் கேள்வி எழுப்பாதது எனக்குக் கொஞ்சம் கவலைதான்.

ஒரு நல்ல செய்தி என்னவென்றால் இத்தகைய கவலைகள் எதற்கும் இடம் இல்லாத ஒரு தொடரைத் தொடங்கவிருக்கின்றேன். வித்தியாசமாக இருக்கும். நீங்கள் தவறாது விளம்பரத்தைத் தேடி எடுக்க வேண்டும். எடுத்துப் படிக்க வேண்டும். படித்துவிட்டு அடுத்த இதழ் எப்பொழுது வரும் என்று துடிக்க வேண்டும். என்ன, கவிதை மாதிரி இருக்கிறதா? இதிலிருந்து அடுத்த தொடர் எப்படி இருக்கும் என்று புரிந்திருப்பீர்கள் என்று நினைக்கிறேன்.

வாழ்த்துக்கள்!

• • •

**பத்து இலட்சம் பொன்னும் கேட்டாள்**
**சத்தியமும் வாங்கிப் போட்டாள் -**
**சகோதரரே**
**தாசிகள் நேசம் மோசமே - தொலை**
**பேசிகள் நேசம் வாழ்கவே!**



**கவிஞர் வி. கந்தவனம்**




YARL WINDOW

BLINDS & DRAPERY

BLINDS DRAPERIES AND SHUTTERS

- Venetian Blinds
- Pleated Shades
- Vertical Blinds
- Cellular Shades
- Roller Shades

FREE ESTIMATE



உங்கள் எண்ணம் போல் வண்ண, வண்ணத் திரைச் சேலைகளுக்கு இன்றே அழையுங்கள்

விபரங்களுக்கு: என். செல்வம் - 905.201.7733
416.806.5397
5210 Finch Ave., E. Unit #3 (Middlefield & Finch) Scarborough, ON



www.divinehome.com for PEACE & PROSPERITY

NEW ARRIVALS OF HAND CARVED ALTARS







More than 50 Models in Display
Our Craffsmen can Custom Design
For your Pooja room from 6 inches to 12 feet
TELL US YOUR BUDGET, YOUR DESIGN. WE DO IT

- HEAT - OIL - WATER - ANY TYPE SMOKE RESISTANT
- Pooja sets new price - New Sets 06s $250.00
02 wall unit $95.00 - s/02210 - $450.00 (4ft)
06 ma 4ft - $450.00 many more low prices!!!
- GOLD GOOD LUCKY குபேரன் பல வித அளவுகளில்
- GOOD LUCK THREE LEG FROG
- GOOD LUCK DRAGON, GOOD LUCKY QUALITY CHIME FROM USA
வலம்பரிச் சங்கு, சுவாமிபடங்கள், சுவாமி சிலைகள், Fountains,
சிப்பியால் செய்த பலவித பொருட்கள்
- Antique Reproduction Console Tables, Mirrors Benches, Chairs, Curiw, Utility Stands, Occasional (Coffee) Tables, Hall Tree, Chest many more







GREAT GIFTS IDEAS FOR ALL OCCASIONS

Visit Once — Agents Wanted
2-2956 Eglinton Avenue East, Scarborough.(Bellamy & Eglinton)
Call SABESH 416-289-1043, 416-999-3997

A HOME WITHOUT DIVINE HOME IS NOT A PERFECT HOME
To Get Spritual Vibrations In Your Home Visit

DIVINE HOMES
Manufacturers - Importers - Distributors
Switzerland Showroom 41 79 7774 4546
Malaysia Showroom 606 764 1264 Factory 60126311264

# மேலைத் தேசத்தில்

# கீழைத் தேசத்து வாசனைகள்...

Niru BRAND®

## எமது புதிய அறிமுகங்கள்




Imported & Marketed By:

**NIRU ENTERPRISES INC.**
76, Howden Road, Scarborough.
Ontario, CANADA, M1R 3 E 4
Tel: (416) 750 1976
Fax: (416) 750 8779
www.niru.com

**NIRU (EUROPE) LTD.**
Unit 11, Mitcham Industrial Estate,
85, Streatham Road, Mitcham,
Surrey, CR4 2AP. U.K.
Tel: +44 208 640 8228
Fax:+44 208 640 8312

# தற்காலிகமான & நிரந்தரமான ஆயுள் காப்புறுதி திட்டம்

## “ரேம் இன்சூரன்ஸ்” (Term Insurance) என்றால் என்ன?

“TERM” என்ற சொல் “TEMPORARY” என்னும் ஆங்கில சொற்தொடரில் இருந்து உருவாகியது. அதாவது ‘தற்காலிகமான ஆயுள் காப்புறுதி திட்டம்’ என்பதாகும்.

‘ரேம் இன்சூரன்ஸ்’ என்பது குறிப்பிடப்பட்ட சில வருடங்களுக்கு மட்டுமே வலிமையுடையதாகும். குறிப்பிடப்பட்ட ஒரு வயதுடன் காலாவதியாகி விடும். இங்கு உயிர் இழப்பு நடந்தால் மட்டும் நட்டஈடு கிடைக்கும். பண பெறுமதியோ, சேமிப்போ பணத்தினை திரும்ப பெறுதல் என்பதே இல்லை. செலுத்திய பணம் செலுத்தியது தான். அதாவது கார் இன்சூரன்ஸ் மாதிரி என குறிப்பிடலாம். விலையும் மலிவானதாகும். இத் தற்காலிகமான ஆயுள் காப்புறுதி திட்டத்தில் விரும்பினால் நிரந்தரமான வாழ்நாள் முழுவதும் செயல்படும் ஆயுள் காப்புறுதி திட்டமாக மாற்றியமைக்கும் திட்டம் (Convertible Term Insurance) எனவும் அல்லது மாற்றியமைக்க முடியாத திட்டம் (Non - Convertible Term Insurnce) என இருவகை உண்டு. இங்கு மாற்றியமைக்க கூடிய திட்டம் எனப்படும் போது, எதுவிதமான மருத்துவ பரிசோதனைகள் புலனாய்வுகள் என்று இல்லாது விரும்பியபடி மாற்றியமைக்கலாம். இவ் இரு திட்டங்களின் விலைகளிலும் வித்தியாசம் உண்டு இவ் ‘ரேம் இன்சூரன்ஸ்ஸில்’ பலவகையான திட்டங்கள் உண்டு.

1. 10 வருடங்களுக்கு உரியது.
2. 20 வருடங்களுக்கி உரியது.
3. 30 வருடங்களுக்கு உரியது.
4. 65 வயதுவரை மட்டும் உரியது.
5. 75 வயதுவரை மட்டும் உரியது.

இப்படியே பலவகையான ரேம் இன்சூரன்ஸ் சகல வகையான காப்புறுதி கம்பனிகளினாலும் சந்தைப்படுத்தப்படுகின்றது. சகல கம்பனி களுக்கும் முகவராக உள்ள ஒரு புறோக்கர் மூலம் மலிவான விலையில் உள்ள கம்பனி, திட்டம் எது? என்பதனை பரிசீலனை செய்த பின்பு சேர்ந்து கொள்ளலாம். திட்டங்களுக்கு ஏற்றமாதிரி விலைகளிலும் வித்தியாசங்கள் உண்டு.

சிவ. பஞ்சலிங்கம் B. Com,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999



## நிரந்தரமான வாழ்நாள் முழுவதும் (Whole Life Insurance Plan) உள்ள ஆயுள் காப்புறுதி திட்டம் என்றால் என்ன?

ஒரே குறிப்பிடப்பட்ட, நிர்ணயிக்கப்பட்ட மாறாத விலை, ஒரே தொகை, உயிரிழப்பு என்பது மறுநாள் நடந்தால் என்ன?, நூறு வருடங்களுக்கு பின்னர் நடந்தால் என்ன? கண்டிப்பாக தங்கியிருக்கும் குடும்பங்களுக்கு மாறாத ஒரு குறிப்பிட்ட நட்டஈடு ஒரு முதலீடு.

இதிலும் பலவகைகள் உண்டு.

1. குறிப்பிடப்பட்ட வருடங்களுக்கு மட்டும் பணம் செலுத்தி விட்டு பின்னர் எதுவிதமான பணமும் செலுத்த தேவையில்லாத திட்டம் (Guaranteed Insurance Payment Plan)
2. முதலீட்டு திட்டத்துடன் சேர்ந்த ஆயுள் காப்புறுதி திட்டம். (Life Insurance with investment funds)
3. பணபெறுமதியுடன் சேர்த்த ஆயுள் காப்புறுதி திட்டம் (Life insuracne with cash value)
4. சேமிப்புகள் பணபெறுமதி இல்லாது வாழ்நாள் முழுவதும் உள்ள திட்டம்

இப்படி பல வகையான திட்டங்களை வாழ்நாள் முழுவதும் உள்ள ஆயுள் காப்புறுதி திட்டங்களாக கனடாவில் காப்புறுதி கம்பனிகள் சந்தைப்படுத்துவதனால் அவரவரின் வயது, தேவைகளுக்கு ஏற்றமாதிரி பல கம்பனிகளிலும் விலைகளை பரிசீலனை செய்து பார்த்து பெற்று கொள்வது நல்லது. எப்படியோ, தற்காலிகமான ஆயுள் காப்பறுதி திட்டம் எனப்படும். ‘ரேம் இன்சூரன்சினை’ விட விலைகள் நிச்சயம் அதிகமாகவே இருக்கும்.



**யோகா சோதிடம்**

• கிரகப் பொருத்தம் பார்த்தல் • சுபமுகூர்த்தம் கணித்தல்
• பலன் பார்த்தல் • சாதகக் குறிப்புக் கணித்தல்

416-299-8361

தமிழ் மக்களின் நெருங்கிய நண்பர்

**ரவி நடராஜா**

• வாகன விபத்துக்குள்ளாகியவரின் இழப்பீடு பற்றிய தகுந்த ஆலோசனைகள் வழங்கப்படும், உரிய இழப்பீடுகள், மற்றைய இழப்பீடுகள், விபத்துக்குள்ளாகியவரின் சம்பள இழப்பீடுகள் மற்றும் வாகன விதி முறைகளை மீறிய குற்றங்கள் Accident & Traffic Ticket

(14 Years Insurance Claims Experience)

416-245-6555 2095 Weston Road, Suite 203, Toronto, ON
416-755-2801 2390 Eglinton Ave., E. Suite 223, Scarborough, ON



**SRI PARADISE Catering & Take -out**

416.269.4509 / 416.509.2454

292 Markham Road, Scarborough, ON

| | |
|---|---|
| திங்கள் - செவ்வாய் சிங்கப்பூர் நூடில்ஸ் (கோழி மரக்கறிகளுடன்) | $2.99 |
| புதன் - வியாழன் கொத்துரொட்டி ஆடு மாடு கோழி | $2.99 |
| வெள்ளி மரக்கறிச்சாப்பாடு 5 மரக்கறி, சலாட், பப்படம், ரசம், மிளகாய்ப்பொரியல், அச்சாறு, பாயாசம், வடை | $4.50 |
| Daily special மரக்கறிச்சாப்பாடு 3 மரக்கறி சலாட், பப்படம் ரசம், மிளகாய்ப்பொரியல், அச்சாறு | $2.99 |
| Dinner Special சிங்கப்பூர் நூடில்ஸ் கோழி மரக்கறிகளுடன் | $2.99 |
| சனி - ஞாயிறு Lunch Special வாழையிலைச் சாப்பாடு கோழி, ஆடு, மாடு, இறால், நண்டு, மீன், முட்டை, கருவாடு, அச்சாறு, கட்டைச் சம்பல், மீன் பொரியல், கட்லட், உருளைக் கிழங்கு, நெத்தலி பிரட்டல், கத்தரிக்காய் பிரட்டல் | $5.99 |
| பரடைசின் Special புரியாணி, தண்டூரி சிக்கன், இஞ்சிச் சம்பல், salad | $2.99 |
| Dinner Special மசாலா தோசை, சாம்பாறு, சம்பல் | $1.99 |
| Daily Special பரடைசின் Special புரியாணி சிக்கன்கறி சலாட் முட்டை | $2.99 |



*Sri Paradiase Specials*

- 10LB அவித்த கோதுமை மா - $3.99
- ரொட்டி .50¢
- விசேட வைபவங்களுக்குத் தேவையான 6 வகையான Combo package. 20 பேர் கொண்ட சபைக்கு $99 மட்டுமே.
- மாதத்திற்குரிய சாப்பாடு - 1 நேரச் சாப்பாடு 1 மாதத்திற்கு - $99.00
  2 நேரச் சாப்பாடு 1 மாதத்திற்கு - $150.00

சமையலில் அனுபவம் உள்ளவர்கள் வேலைக்குத் தேவை. தொடர்பு கொள்ளவும்

25 மேல் கொள்வனவு செய்வோருக்கு 10LB அவித்த மா இலவசம்

# வைராக்கியத்தின் சிகரம் வாகீசர்

திருமுனைப்பாடி நாட்டிலுள்ள திருவாரூரில் வேளாண் மரபில் புகழனாருக்கும் மாதினி யாருக்கும் மகனாகப் பிறந்தவர் மருள் நீக்கியார். இதுதான் திரு நாவுக்கரசு நாயனாரின் இயற் பெயர். திலகவதியார் இவரின் தமக்கையா ராவர். முற்பிறப்பில் வாகீச முனிவராக இருந்து சாபத்தின் காரணமாக புகழனாருக்கும் மாதினி யாருக்கும் இவர் மகனாகப் பிறந்தார் எனக் கூறப்படுகின்றது. மணம் பேசியிருந்த மணாளனான படைவீரர் மரித்ததினால் வாழ்வில் சலிப்புற்று உயிரை மாய்த்துக் கொள்ள விரும்பிய திலகவதியார் மருள் நீக்கியாரின் வேண்டுகோளுக்கு இணங்கி உயிர் வாழ ஒருப்பட்டார். தம்பியர் உளராக வேண்டும் என்ற தமக்கையாரின் தியாகத்தினால் தான் திருநாவுக்கரசர் என்ற நன்முத்து சைவ உலகிற்குக் கிடைத்தது.

நா. க. சிவராமலிங்கம்

ஞானசம்பந்தர், சுந்தரர், மணிவாசகர் இவர்களிலிருந்து மாறுபட்டவர், வேறுபட்டவர் நாவரசர். இவர்கள் மூவரும் பிராமண குலத்தினர். நாவரசர் வேளாண் மரபினர். சம்பந்தர் பதினாறு வயதிலும் சுந்தரர் பதினெட்டு வயதிலும் மணிவாசகர் முப்பத்திரண்டு வயதிலும் முத்தியடைந்தனர். ஆனால் நாவரசர் எண்பத்தி யொரு வயதுவரை இவ்வுலகில் வாழ்ந்து இறைபதம் அடைந்தவர். நீண்டநாட்கள் வாழ்ந்தமையால், பழுத்தபழமாக, இருந்தமை யால் முதியவர் என்பதால் அப்பர் என அழைக்கப்பட்டிருக்கலாம். அத்துடன் தனது கருத்துக்களை பிறர்மனங்களில் நிலைபெறச செய்தமையாலும், அதாவது அப்பியதாலும் அப்பர் என்று அழைக்கப்பட்டிருக்கலாம். அப்பர் என்ற பெயர் ஞானசம்பந்தரால் வழங்கப்பட்டதாகும். இறைவன் மீது பக்திச் சுவை சொட்டும் பாடல்களைப் பாடியதனால் நாவுக்கு அரசர் என்று இறைவனாலேயே பின்னர் நாமம் சூட்டப்பெற்றவர். இறைபற்று மேலீட்டில் பல நற்காரியங்களை ஆற்றிய மருள்நீக்கியார் பற்றற்று உலக வாழ்க்கையை விட்டு விலகி வாழ சமண சமயமே சிறந்தது என உணர்ந்தார். எனவே பாடலிபுரம் சென்று சமண சமயத்தில் சேர்ந்து தரும சேனர் ஆனார்.



நம்பியார் சைவ சமயத்தைத் துறந்து சமண சமயத்தில் புகுந்ததினால் வேதனை யுற்ற திலகவதியார் இறை வனை இறைஞ்சினார். இறைவன் தரும சேனருக்கு சூலை நோயைக் கொடுத்த ருளினார். சூலை நோயைத் தணிப்பதற்கு சமணர்களு டைய கைவண்ணம் பலிக்கா ததினால் அவர் இரவோடு இரவாக தமக்கையாரை வந்தடைந்தார். திலகவதி யார் அவருக்கு திருமந்தி ரத்தை உச்சரித்து திருவெ ண்ணீற்றைக் கொடுத்தார். நீற்றினை மேனி முழுவதும் பூசினார். திருநீறின் வீறினால் அவர் தனது நோயிலிருந்து ஆறுதல் பெற்று தேறுதல் அடைந்தார். இறைவனது பெருங்கருணையை வியந்து திருநீற்றுப்பதிகம் பாடினார்.

மீண்டும் சைவசமயம் புகுந்த நாவரசருக்கு சமண அரசன் பலவிதமான கொடுமைகளைச் செய்தான். நீற்றறையுள் பூட்டி வைத்தான். நஞ்சு கலந்த பாற்சோற்றை உண்பித்தான். மதம் கொண்ட யானையை ஏவிவிட்டான். கல்லோடு கட்டிக் கடலிலே போட்டான். ஒன்றினாலும் அவருக்கு ஊறு ஏற்படவில்லை. புடம் போட்ட பொன்போலா னார். அவரது உள்ளத்தின் உறுதியினால் இந்நிலை அவருக்கு ஏற்பட்டது எனலாம்.

அப்பரது உள்ளத்தின் உறுதியினால் திருவையாறு தென் கையலாயமாயிற்று. தனது உள்ளத்தின் உறுதிப்பாட்டை பின்வருமாறு வெளிப்படுத்தி யுள்ளார் அவர்.

நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம் நடலையில்லோம்
ஏமாப் போம் பிணியறியோம் பணிவோமல்லோம்
இன்பமே எந்நாளும் துன்பமில்லை
தாமார்க்கும் குடியல்லாத் தன்மையான
சங்கரன் நற்சங்க வெண்குழையோர் காதிற்
கோமாற்கே நாமென்று மீளா ஆளாய்
கொய்மலர்ச் சேவடியினையே குறுகினோமே

சமணச் சேற்றில் உற்று உழன்ற தனக்கு இறைவன் மீது பற்று மேலிட அற்புதம் விளைவிக்கும்படி வேண்ட இறைவன் அவர் தோள்மீது சூலக்குறியை மதம் இடபக் குறியையும் பொறித்தருளினார். ஞான சம்பந்தரும் நாவரசரும் சமகாலத்தினர். ஞான சம்பந்தினரின் பல்லக்கினைத் தாங்கும் பேற்றினை நாவரசர் பெற்றார். அப்பர் எங்குற்றார் என்று ஞானக்குழந்தை வினவ அடியேன் இங்குற்றேன் என்றார். பணியுமாம் பெருமை என்பதற்கு இலக்கணமாக வாழ்ந்தவர் நாவரசு. உழவாரப்படையாளியாகக் காட்சிதரும் அப்பர் 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற இலட்சியத்துடன் வாழ்ந்தவர். ஆண்டவன் மீது பூண்டிருந்த பேரன்பினால் திருத்தாண்டகம் பாடி வேண்டுதல் செய்தவரை ஈண்டு நாமும் ஏற்றிப் போற்றுவோம்.

# இடுப்பு மற்றும் முதுகு வலிக்கு அர்த்தக்கட்டி சக்கராசனம்

பக்கவாட்டில் வளைந்து செய்யும் ஆசனம். கட்டி என்றால் இடுப்பு.



### செய்முறை

1. விரிப்பின் மீது கால்களை ஒன்று சேர்த்து நிற்கவும்.
2. வலது கையை பக்கவாட்டில் உயர்த்தி, உள்ளங்கையை மேல் நோக்கி திருப்பி கையை மடிக்காமல் உயர்த்தி வலது காதுக்கு பக்கத்தில் ஒட்டியது போன்று நிறுத்தவும்.
3. அப்படியே இடது பக்கவாட்டில் வளைந்து படத்தில் உள்ளபடி 10 எண்ணிக்கை இருக கவும். சாதாரண மூச்சு நேராக பார்க்கவும்.
4. மெதுவாக நிமர்ந்து நிற்கவும். கையை பிரித்து சாதாரண நிலைக்கு வரவும்.
5. இதுபோல் மாற்று ஆசனமாக இடது கையை உயர்த்தி செய்யவும்.

### குறிப்புகள்

1. பயிற்சியின் போது முன்னால் அல்லது பின்னால் வளையக் கூடாது. பக்கவாட்டில் மட்டுமே வளைந்து செய்யவேண்டும்.
2. மூச்சை அடக்குவதோ, கையை மடிப்பதோ கூடாது.

### பலன்கள்

இடுப்புவலி, முதுகுவலி போகிறது. ஊளைச் சதை கரைந்து இடுப்பு அழகு பெறுகின்றது. ஜீரண உறுப்புகள் பலப்படுகிறது.



ஆரோக்கிய வாழ்வு

N. செல்வசோதி


# WAREHOUSE SALE



**நம்பிக்கை, தரம், குறைந்த விலையில் நிறைந்த பொருட்கள் விசேட மலிவு விற்பனையில் உண்டு.**



- நம்பமுடியாத, வேறு எங்கும் பெறமுடியாத விலையில் Blankets.
- விதம்விதமான Shirts, T Shirts வகைகள்
- பெரியவர்களுக்கான Gloves, Shoes
- சமையலுக்குத் தேவையான பொருட்கள்
- Traveling Suitcase

இன்னும் பல பொருட்கள் மிகக் குறைந்த விலையில் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: Raja / Shawn

**(416) 412.6180**

**40 Nugget Ave.**
**Unit #8**
**Mccowan & Nugget**



# MOHAN HOMEOPATHIC CLINIC & MASSAGE CLINIC

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் **டாக்டர் ஜே. மோகன்**



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

**TEL: 416-298-7537 / 416-291-3022**

5200 Finch Ave, East Suite 210
(At Middle Field), Scarborough, M1S 4Z4

125

நகைச்சுவைத் தொடர்

# ராசம்மா ராச்சியம்

கலகலப்பு தீசன்

“பெற்ற தாயும் பிறந்த நன்நாடும் நற்றவ வானிலும் நனி சிறந்தனவே”

சித்திரா பௌர்ணமி அன்னையின் ஆத்ம சாந்திக்காக... ஆட்டிலறி அன்னம்மா, பிறிம்லி மீனா கோயிலுக்கு சென்று பெற்றவள் நினைவுக்காக அர்ச்சனை செய்து திரும்பி வந்து கொண்டிருந்தனர்.

வானொலியில் அன்னையர் தினம் பற்றிய நிகழ்ச்சிகள்....

இசைக்குயில் திருமதி விஜயலக்சுமி சீனிவாசனின் ‘அன்னையே என் நேரமும்’ என்னும் சிடி இசைத்தட்டிலிருந்து பாடல்கள் ஒலித்துக்கொண்டிருந்தன. இவ்வருட சித்திரா பௌர்ணமி தினத்தன்று கூட ‘திருமுறை வழிபாடு’ என்ற தேவார திருவாசகங்கள் அடங்கிய சிடியும் வெளியிட்டுள்ளார். பக்திப்பாடல்கள், எழுச்சிப்பாடல்கள் கொண்ட ‘முத்துக்கள் மூன்று’ எனும் சிடி இசைத்தட்டினையும் வெளியிட்டதோடு நிற்காமல் தமிழும் இசையும் வளர தனது பங்களிப்பினையும் செய்கிறார். தமிழ் வாழ்கிறது, தமிழ் வளர்கிறது.

ஆத்ம சாந்திக்காக சித்திரா பௌர்ணமியை தமிழர் மறப்பதில்லை. ஆனால் வாழ்ந்து கொண்டிருக்கும் தாயை வெளிநாட்டவர், ஏன் நாம் கூட Mothers Day ஐ கொண்டாடுகிறோம்.



உலகண்ணை! தேமதுர தமிழோசை உலகெல்லாம் பரவுதல் வேண்டும் எண்டு சொல்லினம். ‘ஆர் அதை பரவப்பண்ணுறது’ என செக்கண்ட் புளோர் செல்லம்மா கேட்க. ஏன், உலகண்ணை மாதிரி இங்கிலீஸ் தெரியாமல் கனபேர் இருக்கினம். அவை காணும் தானே, என்று சிரித்தா செக்கண்புளோர் செல்லம்மா.

இந்த நேரம் பார்த்துத்தான் பிறிம்லி மீனாவின் மகன் ‘தமிழா நீ பேசுவது தமிழா’ என்று சிரித்தபடி பாடிக்கொண்டு வந்தான்.

தமிழ்... தமிழ் என்றால் இயல் இசை நாடகம். புலம்பெயர்ந்து வந்தவர்கள் பல இழப்புக்களைச் சந்தித்து நம் தமிழ் வாழ வேண்டும் என்று நினைத்து இயல் இசை நாடகம் எனப் பலவழிகளில் தமிழ் வளர பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி என்று போட்டி போட்டாலும் தமிழ் கலை, கலாசாரம் வளர வைத்தவர்கள் அவர்கள் தான்.



அண்மையில் தேனிசைத் தென்றல் தேவா ரொறொன்ரோ வந்திருந்தார். அவர் துர்க்கேஸ்வர ஆலயம் வெளியிட்ட சிடி இசைத்தட்டு வெளியீட்டில் கலந்து கொண்டார். அது மட்டுமல்ல பல வருடங்களாக மேடை, வானொலி, தொலைக்காட்சிகளில் எழுச்சிப் பாடல்கள், பக்தி பாடல்கள், சினிமாப்பாடல்களை கீபோட் இசைமூலம் இன்னிசை நிகழ்சிகளை வழங்கி வரும் பாரதி



ஆட்ஸ் பவதாரணி மதிவாசனின் மாணவர்களை பாராட்டியிருந்தார். அதுமட்டுமல்ல அவர்கள் 2004 ஆண்டு டிசம்பர் மாதம் இந்தியா சென்று இசை நிகழச்சி நடத்தியது பற்றி பாராட்டியது பெருமை தான். தமிழும் இசையும் வெளிநாட்டில் பரப்பப்படுகிறது.



இலங்கையில் பிறந்து அளவெட்டி லயஞானகுபேரபூபதி என பட்டம் பெற்ற தவில் மேதை தட்சணாமூர்த்தி; ‘தவில் என்றால் தட்சணா மூர்த்தி’ என தவில் இசையை உலகெல்லாம் பரவவைத்தவர்.

தேமதுரத் தமிழோசை உலகெங்கும் பரவியது பரவுகிறது. ஆட்டிலறி அன்னம்மா சொன்னா; உலகண்ணை எத்தனை போட்டிகள் எத்தனை பிரச்சினைகள் வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை, மன்றங்களில் என்றாலும் ஆர் குத்தினாலும் அரிசி கிடைத்தால் சரி. யார் யார் என்ன போட்டி போட்டாலும் வளர்வது தமிழ் தானே.

52 கிழமையும் வாரம் தவறாமல் நாலைந்து விழாக்கள் நடைபெறுகின்றன. வளர்வது தமிழ் இயல் இசை நாடகம். அத்தோடு நிற்காமல் சினிமா வரை வளர்ந்து விட்டது தமிழ்.





கனடியத் தமிழ் சினிமா இந்திய திரைப்படத்தோடு சரிக்கு சரி போட்டி போட்டு எடுக்கும் சினிமாக்கள் அல்ல. ஏதோ கலைஞர்களின் மனத்திருப்தி. புலம்பெயர்ந்த நாடுகளிலிருந்து இன்றுவரை ஏறக்குறைய பதினைந்து வருடங்களுக்கு மேலாக மேடை நிகழ்ச்சிகளுக்கு தமது நேரத்தை செலவிட்டவர்கள் பாராட்டும் இன்றி வளர்ச்சியுமின்றி சலித்து விட்டனர்.

எழுத்தாளர்கள், நடிகர்கள், பாடகர்கள், நிகழ்ச்சித் தயாரிப்பாளர்கள், இசைக் கலைஞர்கள் தொண்டர்களாகவே பணிபுரிந்தவர்கள் மட்டுமல்ல கனடாவில் பிறந்த தமிழ் சிறார்களை இன்று தமிழில் வல்லவர்களாக்கியவர்களை யாராவது நினைத்துப் பார்க்கிறார்களா?

இயல், இசை, நாடகம்.

உள்ளூர் கலைஞர்கள் வாழவேண்டும், மதிக்கப்படவேண்டும்.

தமிழ் வாழும், பரவும்.





முத்தமிழ் வளர... தேமதுரத் தமிழோசை உலகெலாம் பரவும்.

உலகண்ணை மும்பை எக்ஸ்பிரஸ் தமிழ்படமோ, ஆங்கிலப்படமோ என்றபடி வந்தா ஆட்டிலறி அன்னம்மா? தமது இளமைக்காலத்தில் வீதிகளிலே எங்கள் நாயகம் செல்வநாயகம் என தமிழுக்காகப் பாடுபட்ட ஈழத்துக்காந்தி என அழைக்கப்பட்ட தந்தை செல்வாவை நினைத்தார்.


SAMI DAYCARE



* மாதம் தொடக்கம் 6 வயதுச் சிறார்களுக்குச் சிறந்த பராமரிப்பு
* ECE தகுதி பெற்ற நடத்துனர் * TAX RECEIPT வழங்கப்படும்
* காலை 7:00 மணி - மாலை 6:00 மணி வரை * மாலை 6:00 மணி - மாலை 10:00 மணி வரை * சனி, ஞாயிற்றுக் கிழமைகளிலும் பிள்ளைகள் பராமரிக்கப்படும்

1 Hr. - $3.00
Day - $15.00
Week - $75.00

Summer Daycare - $60 with food & Everything

தினசரி நடவடிக்கைகள் * உள்ளக, வெளியக, விளையாட்டுக்கள், தமிழ் ஆங்கிலம் படிப்பித்தல், இரு நேர உணவு, வெளிப்புறச் சுற்றுலா.

#7 Birchcrest Court (Finch / Warden) Mrs.S.J. சௌந்தரநாயகம் 416-502-3033



SHAWN TRUCK & FORKLIFT
DRIVING SCHOOL







Fork Lift licence
$75.00

Truck licence
$899.00

In Classes
365 (Learning Permit)
Dangerous Goods
Border Crossing
Air Brake (Z)
Log book

- A-Z & D-Z up grade • One on One Training
- Job Placement Right Away!
- உடனடி வேலை வாய்ப்புக்கள்
- வாரத்தில் ஏழு நாட்களும் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் பயிற்சிகள் வழங்கப்படும்.

Air brake
$175.00

Excellent Quality - Low Cost Training

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்:

Pl. Call: Raja / Shan

416.412.7618/416.829.0603

40 NUGGET AVE., #8, Scarborough East (McCowan & Sheppard)



NTE AUTO
New Trade Engineering Inc.



ஸ்காபரோவில் 14வது வருட தன்னிகரற்ற சேவை

உங்கள் சகலவிதமான ஐரோப்பிய, ஜப்பானிய, அமெரிக்க வாகனத் திருத்த வேலைகளுக்கு நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்.

Also Air Condition Service & Repair

SIVABALAN

416.750.1573

என். ரி. இ. ஓட்டோ இங்க்

151 NATUCKET BLVD., UNIT #12, SCARBO., ON

IN NEW MILLENNIUM WE ARE ENTERING 11TH YEAR SERVICE IN SCARBOROUGH.

# சரணாகதி தரும் வாய்ப்புகள்

## ஆளுமை (50) வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள்

எனக்கூடாகச் செய்ய முடிந்தவற்றைத் தான், அப்பேரருட் சக்தியாகிய இறைவனால் எனக்குச் செய்யமுடியும் எனும் உண்மையை இன்று நான் நன்கு உணர்கிறேன்.

ஆம்! பூரண சரணாகதியே, இறையருளை எம் வாழ்வினுள் ஆகர்ஷிக்கும் காந்தம் என்பதற்குச் சான்றாக இதோ எனது அநுபவம்.

இளம்பிராயத்தில் எனக்கு ஆன்மீக அறிவோ, நாட்டமோ, சேவை மனப்பான்மையோ கொஞ்சங்கூட இருக்கவில்லை. சம்பளத்திற்கு ஒரு போதும் நான் வேலை செய்யாதபடியால் என் விருப்பப் பூர்த்திக்கு நான் இப்போது கூடத்தான் பெரிதாகப் பணம் செலவழிப்ப தில்லை. சிறுவயது முதல் எனது அசுர வாசிப்புப் பழக்கமாகிய யானைப்பசிக்கு வீட்டில் குவிந்திருந்த அப்பாவின் பல்சுவைப் புத்தகங்கள் முதல் உணவளித்தன. திருமணமான பின்பும் அப்பாவின் பழைய புத்தகங்கள் அபயம் தந்தன. இற்றைக்கு சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் பகவான் சத்யசாயிபாபாவின் அருளுரைப் போதனைகளின் ஈர்ப்பினிற்குச் சரணடைந்து, ஆன்மீகப் பாதையில் காலடி பதித்த எனக்கு வழிகாட்டிட, சிறிது சிறிதாய் ஆரம்பித்த அற்புதங்கள் பெரிது பெரிதாகி இன்னும் தொடர்ந்து என்னை பக்திப் பரவசத்தில் ஆழ்த்துகின்றன. கணவன் துணையின்றித் கொழும்பிற்குக் கூடத் தனிப்பிரயாணம் செய்தறியாத எனக்கு, ஒன்றல்ல இரண்டல்ல, ஒன்பது தனி புட்டபர்த்தி யாத்திரைகள் என் பயத்தைப் பொசுக்கி சுயநம்பிக்கை வளர்த்தன.

கடந்த ஒன்றரை ஆண்டுகளுக்கு மேலாக, எனக்குப் பிறந்தநாள் பரிசாகக் கிடைத்த Iyanla Vanzant எழுதிய ‘Until Today’ எனும் நூலை தழுவியும், எனது அநுபவங்களையும் கலந்து தான் ஆளுமை வளர்ச்சிப் பிரார்த்தனைகள் எனும் இத்தொடரை நான் எழுதி வருகிறேன். மானிட சேவையே மாதவ சேவையெனும் என் அர்ப்பணிப்பிற்குப் பரிசாகத் தான் எனக்கு இப்படி உதவி வழிகாட்டும் புத்தகங்கள் கிடைத்து என்னை ஊக்குவிக்கின்றன.

ஆம்! இறைவன் எனக்கு உதவிட நான் அநுமதித்தாலன்றி, அவர் எனக்கு எப்படி உதவி செய்ய முடியும்? “தெய்வத்தை விட எனக்குக் கூட தெரியும், அவரைவிட நான் கெட்டிக்காரன்”, எனும் இறுமாப்புடன் எம்மில் எத்தனைபேர் வாழ்கிறோம் தெரியுமா? ஆண்டவன் அமைத்துத் தருவதைவிட, இன்னும் சிறந்த முறையில் எமக்கு அத்தியாவசியமானவற்றை எல்லாம் பெற்றிட எமக்குத் தெரியும் எனவும் சிலர் நம்புகிறோம். எமது வாழ்விற்குள் முதல்வனை அநுமதிக்காது, நாம் விரும்புபவற்றை எமது போக்கிலேயே செய்வதில் மும்முரமாய் இருக்கிறோம்.

அந்த ஆண்டவன், அருள்மிக்கவர். அவர் ஒருபோதும் உன்னுடன் போராடமாட்டார். இறைவன் உன்னுடன் சண்டையிட்டால், உனக்கு எத்தனை தோல்விகள் வரும் தெரியுமா? உண்மையில் இறைவன் எம்மில் பலருக்கு நல்ல சாட்டையடி தான் போட வேண்டும். ஆனால் நாம் துதித்து, அவரின் உதவியைக் கோரி அழைக்கும்வரை, இறைவன் பொறுமையுடன் காத்துக் கொண்டிருக்கிறார். எந்த விடயமானாலும் சரி தெய்வத்தின் சித்தம் தான் சிறந்தது என்பதை நீ உணர்ந்து, அவரை உதவிக்குக் கூப்பிடுமட்டும், நீ செய்வதைச் செய்யட்டும் என, ஒன்றும் செய்யாமல் அவர் பார்த்துக் கொண்டிருப்பார். நான் விரும்பின மாதிரி தவறாகத் தான் வாழ்வேன் என நீ அடம்பிடித்தால், தலைவன் உன் விருப்பப்படி வாழ உன்னை அநுமதிப்பார். நீ செய்பவை நற்பயனளிக்காவிட்டாலும் அவர் தானாக முன்வந்து உன்னை ஒருபோதும் தடுக்க மாட்டார். பூரண சுதந்திரத்துடன் வாழவேண்டும் என, நீ பிழையாக நினைப்பதால், இறைவன் அருளுக்கு உன் மனப்போக்கு ஒரு முட்டுக்கட்டையாகி விடுவதை நீ ஒருபோதும் உணர்வதில்லை. நீ நினைக்கிற மாதிரி செயற்படாவிட்டால், உன் வாழ்க்கை நீரோட்டம் ஸ்தம்பித்துவிடும் என நீ எண்ணலாம். ஆனால் சர்வவியாபியாகிய அப்பேரருளுக்கு, தான் ஒருபோதும் தவறு செய்வதில்லை, தோல்வி யடைவதில்லை என்பது நன்கு தெரியும். ஆனால் தனது திறமையை உனக்கு நிரூபித்துக் காட்ட வேண்டிய அத்தியாவசியமும் அவருக்கு இல்லை.

இறைவன் அருளை நீ இவ்வாறு தடுப்பதை நீ எப்படி உணரலாம்? முதலாவதாக உனது பிழையான மனக்கோட்டைகளை மூட்டைகட்டித் தூர வைத்து விடு. இறைவனின் திட்டம் உன் வாழ்வில் மலர இடமளிக்க வேண்டும் என்பது எப்படி உனக்குத் தெரியவேண்டும். இதையறிய மிகசுலபமான வழி என்ன தெரியுமா? நீ விரும்புவற்றைச் செயற்படுத்த பகீரதப் பிரயத்தனம் செய்தும் ஒரு முன்னேற்றமும் ஏற்படாவிட்டால், இறைவன் சித்தத்தை எதிர்த்துச் செயற்பட நீ முயற்சிக்கிறாய் என்பது தான் அர்த்தம் என்பதைப் புரிந்துகொள்.



இதுவரை, உனது வாழ்வு நீரோட்டத்தினை இயக்குவது நானே நான் தான் எனும் உனது இறுமாப்பையும், அகங்காரத்தையும் உடனடியாகக்கை விட்டு, முழுமுதற் கடவுளைச் சரணடைந்து உதவி கோரிப் பிரார்த்தனை செய். நிச்சயம் உனக்கு உதவி வரும். எனக்கு உதவி, எனக்கூடாகச் செயற்பட இறைவனை அநுமதித்து பூரணசரணாகதியுடன் இன்று அவர் தாள் பணிகின்றேன்.


மேலதிக தகவல்களிற்கு அழையுங்கள் 905-624-9617



லலிதா புரூடி



**The Mortgage Alliance company of Canada**



**வீடு வாங்குவது நீங்கள்**
**பணம் ஒழுங்கு செய்வது நான்**



உங்கள் இல்லத்தை 5% முற்பணத்துடன் கொள்வனவு செய்வதற்கு வங்கி வட்டி வீதத்தைவிட குறைவாக வீடு மற்றும் வியாபார 1ஆவது, 2ஆவது, 3ஆவது அடமான கடன் பெற நாடுங்கள் - காந்தன்

Tel.: 416.291.3997
Cell: 416.895.4283

குறைந்தவட்டி நிறைந்த பலன்



# DEBT & MORTGAGE SOLUTIONS !!



- கடன் தொல்லையா?
- கடன்காரர்களின் தொந்தரவா?
- Credit பிரச்சனையால் Mortgage கிடைக்கவில்லையா?

**கவலைப்படாதீர்கள்!**

அனைத்து வித பொருளாதார பிரச்சனைகளுக்கும் தீர்வு காண

முதல், இரண்டாவது, மூன்றாவது Mortgage பெற அழையுங்கள்

**ராஜ்**

**416-835-6695**

**Call : ‘RAJ’**

for all kinds of Debt & Mortgage Solution

Lendingtree.ca



**Neelam silk**

சுபமுகூர்த்தப் பட்டுக்கு என்றுமே இராசியான இடம்

‘தமிழர் மத்தியில் தரமான பட்டுப் புடவை மாளிகை’

# நீலம் சில்க்

- SONALIKA PURE SILK
- JARDHOSHI SATIN & CREPE SILK
- JAPAN CRYSTAL SILK
- JAIPUR CRYSTAL SILK
- VASUNTHARA NETWORK CREPE



பட்டுத் தெரிவுகள் அனைத்துக்கும்

**“நீலம் சில்க்”**

T.P: 416-778-7455 Fax: 416-778-8484

1453 GERRARD STREET, EAST (INDIAN BAZZAR)

T.P: 416-759-2002

2378 EGLINTON AVE., E. (Kennedy Rd. & Eglinton Ave, Scar.)

SUN TV CANADA
சன் ரீவி

# சன்டிவி கனடா

மாதம் $24.99 US மட்டுமே

## புத்தாண்டை முன்னிட்டு விசேடதள்ளுபடி விலையில்

உலகத்திற்கு ஒளி தருவது SUN உள்ளத்திற்கு ஒளி தருவது SUNTV CANADA

பெருமையுடன் வழங்கும் சன்டிவியின் அரியசந்தர்ப்பத்தை தவறவிடதீர்கள்………..

**Canada Suntv பார்வையாளர்கள் அதிஷ்டசாலி ஆகிறார்கள்**

**நீங்கள் வெகுகாலமாக எதிர்பார்த்த சன்டிவியை அங்கிகாரத்துடன் கனடாவில் பார்த்து மகிழலாம்.**

உங்கள் இல்லம் தோறும் NON-STOP கொண்டாட்டம்……..

சன்டிவியை இழந்தாயா அதற்காகவா அழுகின்றாய்
சன்டிவியை இழப்பதற்கு நான் உன்னை கைவிடமாட்டேன்
எதை நீ இழந்தாயோ அதை இங்கு திரும்பவும் கொடுக்கப்படும்
எதை நீ பார்க்கக் கூடாது என்று சொன்னாயா - அதை
திரும்பவும் மக்களால் பார்க்கப்படுகின்றது!!!

அன்பான வாடிக்கையாளர்களே கடந்த மாதம் உங்கள் அழைப்புகளை பூர்த்தி செய்ய முடியாமைக்கு மிகவும் மனம் வருந்துகின்றோம். உங்கள் ஆதரவிற்கும் அன்பிற்கும் மனம்மார்ந்த நன்றிகள்!!

மக்கள் விரும்பப்படுவது ஜனநாயகம் - மற்றவர்களால் திணிக்கப்படுவது சர்வதிகாரம்

மேலதிக விபரங்களுக்கு இளையபாரதியின் CTBC வானொலியில் வரும் SUNNETWORK விளம்பரத்தை கேளுங்கள்.......

**24 மணித்தியாலங்களும் உங்களுடன் நாங்கள் அழையுங்கள் நட்பான சேவைக்கு.........**

**Toronto - Montreal: 416-899-4626 / 416-876-1732**

**Vancover: 604-598-1167 Fax: 416-441-9335**

## சன்டிவியை மீண்டும் இணைக்க விரும்புகிறீர்களா?

விரும்பினால் இவ்விண்ணப்ப படிவத்தை பூர்த்தி செய்து தொலைநகல் மூலம் அனுப்பலாம்.

dish NETWORK | Largo Communications | INTERNATIONAL SATELLITE PROGRAMING | SUNTV CANADA NETWORK ACTIVATION Phone: 416-899-4626/876-1732 Fax: 416-441-9335 AUTHORIZED DEALER

NAME: | PHONE: | DATE:

ADDRESS: | CITY/TOWN | PROVINCE | PC

RECEIVER MODEL | R O O | SERIAL NUMBER | SMARTCARD | S O O

RECEIVER MODEL | R O O | SERIAL NUMBER | SMARTCARD | S O O

PROGRAMMING PACKAGE OUTLINE

INCL PREM MOVIES $77.99/MO | TOP 180 $44.99/MO | TOP 120 $34.99/MO | TOP 60+ $29.99/MO | TOP 60 $24.99/MO

HBO THE WORKS $13.99/MO | STARZ SUPER PAK $11.99/MO | PREMIUM MOVIE PACKAGE: CHOOSE ALL 4 PREMIUM PCKGE 36.99; CHOOSE ANY 3 PREMIUM PCKGE 29.99; CHOOSE ANY 2 PREMIUM PCKGE 22.99; ALL AMOUNTS LISTED IN $US | SHOWTIME UNLIMITED $11.99/MO | MULTIMAX FROM CINEMAX $11.99/MO

PLEASE VERIFY DISH REQUIREMENTS AT WWW.SUNTVCANADA.COM OR WITH YOUR DEALER.

Cricket TBA/YR/WK

INTERNATIONAL: 24.99/MO; 34.99/MO; 24.99/MO; 24.99/MO; 24.99/MO; 24.99/MO; 24.99/MO; 24.99/MO
A WIDE RANGE OF INTERNATIONAL PACKAGES & COMBOS ARE AVAILABLE ON REQUEST

JAMBO PACK 44.99 | 22.95/MO | 14.99/MO | PLAYBOY | ANNUAL PR FEE $75.00/YR

AUTHORIZATION
The undersigned acknowledges and agrees to the following: 1. All programming and service fees are due in advance. 2. Customer credit card no. Shall be given to the program provider for subscription payment. 3. ISP assumes no responsibility for the frequency or amount of payments charged by the program provide 4. Service fees will apply to programming modifications 5. All terms and conditions of ISP Customer Agreement shall apply.
Credit card authorization and acknowledgement:
Card No: | Exp: | Signature:

# தூறல்

## In Custody

Cast: Shashi Kapoor , Om Puri , Shabana Azmi , Neena Gupta , Sushma Seth , Ajay Sahni. Director: Ismail Merchant

புக்கர் பரிசுக்காக பரிந்துரைக்கப்பட்ட அனிதா தேசாயின் நாவலை மையமாகக் கொண்டது. தேவன் (ஓம் பூரி) கிந்தி பேராசிரியர், உருதில் புலமை கொண்டவர். சிறு சஞ்சிகை எழுத்தாளர். தற்சமயம் வாழ்ந்து கொண்டிருக்கும் உருதுக் கவிதை மேதை நூர் (சசி கபூர்) ஐ பேட்டிகாணும் சந்தர்ப்பம் கிடைக்கிறது.

அருகி வரும் உருது மொழியை உயிர்ப்பிக்க முயற்சி எடுக்கின்றார்கள். நூரின் இரண்டாவது மனைவி (சபனா ஆஸ்மி) தன்னை ஒரு கவிஞையாகவும் இவரது கவிதைகளை தனது கவிதைகளாகவும் கூறிச் செல்கின்றாள். அதேபோல் தேவனின் மனைவி, தேவன் அடிக்கடி போபால் செல்வதை எதிர்க்கின்றாள்.

தேவன் நூரின் பேட்டியை ஒலிப்பதிவு செய்வதுக்கு முயற்சிக்கின்றார். இதற்கு ஒலிப்பதிவு கருவி தேவை. தேவனின் கல்லூரி முதல்வர் நேரம் கொடுக்க மறுக்கின்றார். நூரின் முதல் மனைவி உதவி செய்ய விரும்புகின்றார். ஆனால் பணம் கேட்கின்றார்.

அருகி வரும் உருது மொழியை உயிர்ப்பிக்க முயற்சி எடுக்கும் இரு கவிஞர்களின் போராட்டமும் அவர்களை சுற்றியுள்ளவர்களின் அலட்சியத்தையும், ஆட்சி மொழியை மீறி அருகி வரும் மொழியை உயிர்ப்பிக்க முடியாததையும் அழகாக இயக்குனர் பதிவு செய்துள்ளார்.

தமிழ் மொழிக்கும் நாளை இதே நிலை ஏற்படலாம். ஆரம்பத்தில் சமஸ்கிரதம், (ஶ்ரீ,ஷ,ஸ - தமிழ் சொற்களல்ல), பின்னர் டச்சு, ஆங்கிலம், கிந்தி என உள்வாங்கப்பட்டுள்ளது. எழுத்துக்கள், சொற்கள் மாத்திரமல்ல, பேச்சுக்களும் அவ்வாறே. தொலைக்காட்சிகள் முதலிடம் வகிக்கின்றன. சன் ரிவி (சங்கத் தமிழ் மேதைகளின் நிறுவனம்) யில் Sponsered by எனத் தொடங்குவதில் இருந்து ஆங்கிலம் தலை தூக்கிறது. என்று தணியும். . . . . .

அமைதியான உருது கவிஞராக ஓம் பூரி, உருது கவிதை மேதையாக சசி கபூர் சிறப்பாக நடித்துள்ளனர். இப்படத்தின் சிறப்பம்சம் - ஏமாற்றத்தையும், மனிதமின்மையும் சிறப்பாக பதிவு செய்துள்ள நெறியாள்கை.

## Morning Raga



Language: English
Director:Mahesh Dattani
Producer:K Raghavendra Rao
Cast: Shabana Azmi,Prakash Rao, Perizaad Zorabian, Lillete Dubey
Music: Mani Sharma, Amit Heri

மகேஸ் டற்றானி ஆங்கில நாடகர். இவர் இந்திய - ஆங்கில நாடக உலகில பல தடயங்களை பதித்தவர். இவரது முதலாவது படம் காலை ராகம்.

இருபது வருடங்களுக்கு முன்னர் இசை தெரிந்த நண்பிகள் இருவர், கிராமத்தில் இருந்து நகரத்துக்கு செல்லும் பொழுது பேரூந்து விபத்துக்குள்ளாகிறது. நண்பி ஒருவர் இறந்து விடுகிறார். மற்றைய நண்பி சுவர்ணலதா (சபனா ஆஷ்மி) வின் மகனும் விபத்தில் இறந்து விடுகிறார்.

இருபது வருடங்களின் பின்னர் இறந்த நண்பியின் மகன் Abhinay (Prakash Rao), பேரூந்துடன் மோதிய கார் ஓட்டுனரின் மகள் மீண்டும் சுவர்ணலதாவின் வாழ்வில் ஒளியேற்றுகின்றனர். சுவர்ணலதாவிற்கு புதிய மகன் கிடைக்கின்றார். அபினய்க்கு புதிய தாய் கிடைத்துள்ளார்.
இருபது வருடங்களின் பின்னர் இசை ஒளிர்கிறது.
சிறப்பசம்ங்கள்

- ராஜீவ் மேனனின் ஒளிப்பதிவு.
- சபனா ஆஷ்மியின் சிறப்பான நடிப்பு

இசையைப்பற்றி பல படங்கள் வெளிவந்துள்ள ஆந்திர மாநிலத்திலிருந்து ஆங்கில மொழியில் வெளிவந்துள்ளது. சுருதி தாளம் எதுவுமற்ற ராகம்.

இவ்விரு படங்களையும் N.N. video வில் பெற்றுக் கொள்ளாலாம்.

## வானரன்

NO MORE TEARS SISTER
NO MORE TEARS SISTER: ANATOMY OF HOPE AND BETRAYAL
Director Helene Klodawsky

ராஜினி திரணகமவின் வாழ்க்கையை ஆவணப்படமாக பதிவு செய்துள்ளனர். இந்த ஆவணத்திரைப்படம் கனடிய தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன தயாரிப்பு.

- ராஜினி திரணகமவின் உலகம் பரந்தது. அதனை அவரது குடும்பத்துக்குள் அடக்கியது ஆவணத்தின் அவலம்.
- ஆவணத்திரைப்படத்திற்கு நீண்ட உழைப்பு தேவை. அது எதுவுமற்று ஒரு வட்டத்திற்குள் நின்றுவிட்டது.
- ஒருவரின் கதையை கூறுவதற்கு மற்றவரின் கதை அவசியம் எனக்கூறி (நாயைக் கொண்டு சென்று மேசையில் கட்டிவிட்டு, மேசையைப்பற்றி கூறுவது போல்) குடும்பக்கதையாக மாறிவிடுகிறது.
- இவற்றுக்கு அப்பால் பல உண்மைகள் விடயங்கள் கூறப்பட்டுள்ளன.

தொடர்ச்சி 24ம் பக்கம்

# ஊழி நடனம்

ஊர் நோக்கிச் சிவப்பு நிறப் பேரூந்தை
சுமந்து சென்ற வீதியின்
முதுகுத்தோலை உரித்து இரத்தம் ஒழுகும்
ஒட்டகத்தின் மூரிபோல் மூக்கை நீட்டும்
தலைவாராக் கற்களின்மேல்
அல்பேட்டா முதலைகளின்
காளைச் சவாரிபோல்
தூக்கித் தூக்கிப் போடும் மோட்டார்ச் சயிக்கில்
பல்லைக் கடித்து ஓட்டியின் முதுகைப் பிடித்து
முடிந்தது பயணம் என்று இறங்கும்போது
விதையின் உள்ளே விண் என்று வலிக்கும்

வெப்பத்தைக் காக்க முக்காடு அணிந்து
ஒப்பாரி பாடி அழுது சாவீடு கொண்டாடி
சோர்ந்து மெலிந்து
சாம்பல் படிந்திருக்கும்
தாழை பாலை கீ஌ா நாவல்
காரை ஈஞ்சு விராலி கற்றாளை
உறவுகளின் கூட்டம்

மேய்ச்சல் மாடுகள் ஊர் நோக்கி
நிரையாக நடந்து
யுத்த டாங்கிகள்போல் ஊர்ந்து சென்று
நொருங்குண்ட கல்வீட்டுத் தொடர் நிலம்
பிடுங்கி எறிந்த பூவரசுக் கூட்டம்
சரிந்து படுத்திருந்து இரையை மீட்கும்
தென்னை மரச்செடிகள்
எமைப் பார்த்துத் தலை அசைக்கும்

முருகன் கோயிலில் மிஞ்சியது
மூலஸ்தானத்தின் காற்பங்கு
பிள்ளையாரில் எஞ்சியது
பின் கோயிலின் பாதித் துண்டு

கக்கூசைத் தன் தோளில் தூக்கி
வீசி எறிந்த கோயில் முகப்பு
யானையின் காலில் மிதிபட்ட
விளாம்பழத்தின் ஓடுகள்போல
கவிழ்ந்து படுத்திருக்கும் கவலையின்மேல்
பரந்து கிடக்கும்
கிணற்றுக் கட்டின் சிதிலச் சிதறல்

